# சுடர்

CHUDAR

கலை
இலக்கியத்
திங்கள்
இதழ்



தை - 1979 விலை ரூபா 1-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தி அலைகள்

(மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட சூறாவளிக் கொடுமைகள் பலவற்றை வாசகர்கள் கேட்டும் படித்துமிருக்கலாம். இதுவரை பத்திரிகைகளில் வெளிவராத சில சோகச் செய்திகளை இங்கு திரட்டித்தருகிறோம்)

## கைக் குழந்தையை மண்ணில் புதைத்த சூறாவளி

சூறாவளி, ஈவிரக்கமற்ற தன் கொடிய அனர்த்தங்களை விளைவித்துக்கொண்டிருந்த அந்த நள்ளிரவு நேரம், நாலா பக்கமும் தன் வீட்டின் கூரைகளும் சுவர்களும் இடிந்து சிதறிக்கொண்டிருப்பதைக் கண்டு பயந்த ஓர் இளம் தாய், பக்கத்திலுள்ள உறவினர் ஒருவரின் வீட்டில் புகலிடம் தேடுவதற்காக தன் கைக்குழந்தையை அணைத்தபடி வெளியேறினாள். சூறாவளியின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் போராடிய அவள் தன் பச்சைக் குழந்தை சூறாவளிக் காற்றில் பறந்து போவதைக் கண்டு கதறித் துடித்தாள். அந்த நேரம் அவளால் எதுவுமே செய்ய முடியவில்லை. அடுத்த நாள் காலை தன் குழந்தையைத் தேடிய போது, அது மண்ணில் புதையுண்டு இறந்து கிடப்பதைத்தான் அவளால் காண முடிந்தது.

இச்சம்பவம் மட்டக்களப்பு பிரதேசத்தைச் சேர்ந்த சந்திவெளி கிராமத்தில் நடைபெற்றது. குழந்தையைப் பறிகொடுத்தவரின் பெயர் திருமதி சின்னத்தம்பி.

## காற்றில் பறந்த வயோதிபர்

வீட்டின் இடிபாடுகளுக்குள் அகப்பட்ட கால் நடக்க முடியாத வயோதிபர் ஒருவரை, இருவர் ஒரு சாக்கின்மேல் அமர்த்தி சாக்கின் ஒவ்வொரு பக்கத்தையும் ஒவ்வொருவராக பிடித்துத் தூக்கிக்கொண்டு பாதுகாப்பான இடத்துக்கு கொண்டு செல்ல முயன்றனர். ஆனால் சாக்கினுள் அமர்ந்திருந்த வயோதிபரை சூறாவளி அடித்துச் சென்றதை அவர்களால் அப்போது உணர முடியவில்லை. குறிக்கப்பட்ட இடத்துக்கு சென்ற போது தான் சாக்கினுள் வயோதிபரைக் காணாது திகைத்தனர். மறுநாட் காலை உயர்ந்த கம்பி வேலி ஒன்றில் அவர் சிக்கி பிணமாகக் கிடப்பதைக் கண்டு கலங்கினர்.

இச்சம்பவம் கல்குடாத்தொகுதியைச் சேர்ந்த கிரானில் நடைபெற்றது இறந்தவர் பெயர்: திரு. வி. தம்பிராசா.

## சூறாவளி கோமாளியாக்கிய அமைச்சர்!

உகண்டா அதிபர் இடி அமினைப் பற்றி பலரும் அறிந்திருப்பார்கள். அவர் ஒரு விசித்திரமான மனிதர்; அநாகரிகமான கருத்துகளை வெளியிடுவதில் முதன்மை பெற்றவர். உலக நாடுகளின் தலைவர்களில் மிகக் கோமாளித்தனமான தலைவர் இவர்தான் என்பது பலரது கருத்தாகும். ஆனால் அந்த இடி அமின் எமது நாட்டு தமிழ் அமைச்சர் ஒருவரிடம் 'பிச்சை' வாங்கவேண்டும். அந்த அளவுக்கு பத்திரிகை நிருபர்களை அடிக்கடி அழைத்து மிகமிக அநாகரிகமான—கோமாளித்தனமாக கருத்துகளை வெளியிட்டு தனது அரசியல் சூன்யத்தை பகிரங்கமாக வெளிப்படுத்திக்கொண்டு வருகிறார்.

எமக்கு ஒரு சந்தேகம். மட்டக்களப்பைத் தாக்கிய 'சூறாவளி' அமைச்சருக்கும் 'ஏதும்' செய்து விட்டதோ என்று. அப்படி இருக்கவும் முடியாது—ஏனென்றால் அந்த நேரம் அவர் கொழும்பில்தான் இருந்தார்.

எது எப்படி இருந்தாலும் ஒன்று மட்டும் தெளிவாகப் புலனாகிறது. தன்னைத்தானே கிழக்கின் ஏக தலைவராக பிரகடனப்படுத்திக்கொண்டு, நானே 'எல்லாம்' கவனித்துக்கொள்கிறேன். வெளியார் யாரும் உதவத் தேவையில்லை என்று தம்பட்டமடித்துக்கொண்டு, ஏதோ பெரிய 'அரசியல் லாபத்தை' சம்பாதித்துக்கொள்ளலாம் என்பதுதான் அவரின் ஒரே எண்ணம். அதனால் 'மற்றவர்'கள் மேல் சேற்றை வாரிப் பூச முற்படுகிறார். அது நிச்சயம் பலிக்கவே பலிக்காது.

மட்டுநகர் மக்களுக்கு வெளியார் யாரும் உதவமுடியாதபடி அவசர காலச் சட்டத்தின் கீழ் விதிகளை பிரகடனப்படுத்தும்படி ஜனாதிபதியை வேறு இவர் கோரப்போகிறாராம். ஐயோ இவரின் மூளைக்குள் என்னதான் புகுந்துவிட்டதோ?

தமிழனுக்குத் தமிழன் உதவி செய்வதைக்கூட சட்டத்தால் தடுக்க முனையும் இவரை இடி அமினைவிட கோமாளித்தனமானவர் என்று கூறுவதை விட வேறு என்ன தான் சொல்வது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர்
கலை, இலக்கியத்.
திங்கள் இதழ்

தை —1979.
சுடர் 4—ஒளி—10.

# பொங்கல்

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய மூத்த குடி—
இது இனப் பெருமை.
இயல், இசை, நாடகம் முத்தமிழ்—
இது மொழிச் சிறப்பு.
முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம்—
இது சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த புகழ்.
சேர, சோழ, பாண்டிய மூவேந்தர்—
இறை மாட்சி.
அகம், புறம்—
வாழ்வை இரண்டாக வகுத்த தனிச் சிறப்பு.
இப்படி எத்தனையோ புகழாரம்.
ஆனால் இன்றைய கோலம் என்ன?
முடியில்லை.
கொடி இல்லை.
கொற்றமும் இல்லை

எல்லாம் இழந்த அரசியல் அநாதைகளாக—அகதிகளாக தமிழ் இனம் என்ற ஒரு இனம் உலகில் இருக்கிறதா என்பதே கேள்விக் குறியாக, தமிழ் இனம் வாழ்கிறது. இல்லை—தாழ்ந்து கிடக்கிறது.

குடிப் பெருமை, மொழிப் பெருமை, இலக்கியப் பெருமை இவை ஒன்றுமே அற்ற பல இனங்கள் இன்று தனிக் கொடியோடும், கொற்றத்தோடும் தலை நிமிர்ந்து அரசோச்சுகின்றன.

நாகரீகம் அற்ற, நாடோடிகள் என வர்ணிக்கப்பட்ட ஆபிரிக்க காப்பிலி மக்களுக்கு மட்டும் ஆபிரிக்காவில் இன்று இருபதுக்கு மேற்பட்ட புத்தம் புது நாடுகள் பூத்திருக்கின்றன.

உலகில் உள்ள முப்பது கோடித் தமிழர்களுக்கு உலகின் எந்த ஒரு மூலையில் ஆவது ஒரு கையளவு தனிநாடு கூட இல்லை.

தாய்த் தமிழகத்தில் இந்திக்கு அடிமை.
சேய்த் தமிழகத்தில் சிங்களத்துக்கு அடிமை.

மலேசியா, சிங்கப்பூர், தென் ஆபிரிக்கா, மொரீசியஸ், பீஜீ தீவுகளில் இரண்டாந்தர குடி மக்கள்.

மேற்கிந்திய தீவுகளுக்குக் குடி பெயர்ந்த தமிழர்கள் இன்று மொழியை மறந்து இனமும் மறக்கப்பட்டு அந்நியர் ஆகிவிட்டார்கள்.

இந்த இலட்சணத்தில்
புத்தரிசி
சர்க்கரை
பசும்பால்
முந்திரி, ஏலம்

இவை எல்லாம் போட்டுப் புதுப் பானையில் பொங்கல் பொங்கித்தான் என்ன பயன்?

ஆண்ட பெருமை—இடையில் தாழ்ந்த சிறுமை நீங்கி மீண்டும் ஆளும் நன் நாளே தமிழ் இனத்தின் [illegible] பொங்கல் நாள். அந்த நாள் விரைந்து வருக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொங்கல்

நிலா தமிழின் தாசன்

வருகின்ற தைப்பொங்கல்! வண்டமிழர் பொங்கல்!
வளம்தந்த வெய்யோனை! வாழ்த்துகின்ற பொங்கல்!
உருவாக்கி உலகுதனை உய்விக்கும் தோழன்
உத்தமனும் உழவனவன் உளம்நிறைந்த பொங்கல்

தீந்தமிழர் தொன்றுதொட்டு தொடருகின்ற பொங்கல்!
தொல்லுலகில்! தமிழ்மணத்தைப் பரப்புகின்ற பொங்கல்!
வான்கதிரோன், வருணனினால்! வயல்நிறைந்து பொங்க,
வள்ளலுளம் கொண்டஅரும்! உழவன்தரும் பொங்கல்!

முக்கனியும் சர்க்கரையும் சேர்ந்தநல்ல பொங்கல்!
மூடர்துயர் விறகாக்கி கரியாக்கும்! பொங்கல்!
முத்தமிழின் விடுதலைக்கு முழக்கமிடும் பொங்கல்!
மறத்தமிழன் மார்பெங்கும் மகிழ்வூட்டும் பொங்கல்!

பச்சரிசி யோடுபசுப் பால்சேரும் பொங்கல்!
பழந்தமிழின் தனிச்சுவையை பகன்றுரைக்கும் பொங்கல்!
இச்சையுடன் இன்தமிழர் தனித்தமிழின் ஈழம்
இன்று பெறுவோமென்றே! சபதமிடும் பொங்கல்!

## தமிழீழம் மலரட்டும்!

பொங்கல் பொங்கட்டும்
புதுமை பிறக்கட்டும்,
எங்கள் வாழ்வில், இனி
இனிமை தவழட்டும்.

ஈழத் தமிழ் மண்ணில்
இன்னல்கள் நீங்கட்டும்,
இன்பத் தமிழ்ஈழம்
இன்றே மலரட்டும்.

இந்த உறுதி, நெஞ்சில்
இன்றே பிறக்கட்டும்,
எந்த இடர் வரினும்
நன்றே... நவியட்டும்!

கண்ணன்—தென்பட்டுவில்

## தை மகள் வந்தாள்!

தை மகள் வந்தாள்.........
உழவபெருமக்களை தலைநிமிரச்
சொன்னாள்

ஆதவனை வணங்குங்கள் என்றாள்
அவனுக்கு அமுதுபடையுங்கள்
என்றாள்

இனித்திடும் பொங்கலை உண்டு.........
இன்பத்துடன் இன்நன்னாளை ......
மகிழ்ந்திடுங்கள் என்றாள்

—ஈழகணேஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டகாலிலே...

காவலூரான்.



இரவு.

உறக்கம் வரவில்லை. மனதினுள்ளேயோ அல்லது வெளியிலோ அமைதி குலைந்திருந்தால் என்னால் தூங்க முடியாது. தூக்கம் வராது.

உலகத்தையே கடலாக்க முடிவு செய்து விட்டது போல் மழை பொழிந்து கொண்டிருக்கிறது. “சோ” என்ற அதன் இரைச்சல், சுற்றிவர தாளலயம் தவறாது கேட்கும் பல்வேறு மழைக்கால ஓலங்கள் இவற்றையெல்லாம் வென்று விடுவது போல் கண்களைப் பறிக்கும் மின்னலை விரட்டிக் கொண்டு மலைப்பிரதேசத்தில் பலமுறை எதிரொலிக்கும் இடி முழக்கங்கள் எல்லாம் சேர்ந்து சூழலின் அமைதியைத் தூர விரட்டி விட்டன.

புரண்டு புரண்டு படுக்கிறேன்.

உறக்கம் மட்டும் வருவதாக இல்லை. பிரளயமே வந்து விட்டது போல் உலகம் அடித்துப் புரண்டு கொண்டிருக்க எப்படித்தான் உறக்கம் வரும். எலும்பையே விறைக்கவைக்கும் கடும் குளிர் என்னைக் கிழவனாக்குகிறது. சூடாக ஏதாவது அருந்தினால்......

போர்வைக்குள் உடலைத் திணித்தபடி சமையலறைக்கு வருகிறேன்.

மகாவலிகங்கையின் ஓரத்தில் கங்கைக்கு எதிரே பார்த்தபடி இருக்கிறது எனது வீடு. பின் பக்கத்தில்தான் சமையலறை. பளிச்சென்று வந்து போன மின்னலில் பொங்கிச் சுழித்து வரும் கங்கைக் கன்னியை யன்னலூடாகப் பார்க்க முடிகிறது. கங்கை இன்னும் கரை தாண்டவில்லை. நம்பிக்கை மனதுள்ளே மலர்ந்து கொண்டிருக்கும் போது......

“படார்” ஏதோ முறியும் சத்தம் மிக அருகிலே.

என்ன அது? இருளின் கரும் போர்வைக்குள் எதையென்றுதான் பார்ப்பது? யன்னலடியிலேயே சத்தம் வந்த திசைவழியே பார்த்து நிற்கிறேன். மீண்டும் ஒரு மின்னல், கங்கையின் ஓரத்திலே வீட்டோடு அணைந்து நின்ற அந்தப் பெரிய மரம்தான் முறிந்திருந்தது. கங்கை தன்னோடு அதனை அழைத்துச் செல்ல முயல்கிறது. வெற்றியின் விளிம்பில் கங்கை.

“படார்... படீர்...” சுற்றுடலில் தூரத்தூர மரங்கள் முறிகின்ற சத்தங்கள். பூங்காவிலே வளர்ந்தோங்கி நிற்கும் மரங்களாகத்தான் இருக்கும்.

ஒரேயடியாக வானம் இடிந்து விழுந்து விட்டது. போல் மழை பொழிகிறது. புயல் வெறி கொண்டு சீறுகிறது. என்ன நடந்துவிட்டது இயற்கைஅன்னைக்கு? கொடுமை நிலை கொண்டுவிட்ட மண்ணைக் கடலாக்க முடிவு செய்து விட்டாளா?

உறங்காமலே விழித்திருக்கிறேன். மனம். குழம்பிக் கிடந்ததால் பைத்தியக் காரனைப் போல் குசினிக்குள்ளேயே அங்குமிங்கும் நடந்து கொண்டிருக்கிறேன். மெல்ல மெல்ல வீட்டினுள் கசிந்து வந்த ஈரம் அதிகரித்து இப்போது தேங்கத் தொடங்கி விட்டது. வெளியிலே பொழியும் மழையின் வெள்ளமா? அல்லது கங்கையே புகுந்து விட்டதா?

நேரம் ஆக ஆக நீர் மட்டம் உயர்ந்து கொண்டிருக்கிறது. மழைக்காலக் குரல்களோடு போட்டி போடும் மலைச்சாரல் புள்ளினங்களின் கீதங்கள் கேட்டால் விடிந்து விட்டதை உணர்ந்து கொள்ளலாம். எப்போது விடியும்? விடியுமா?......

விடியும் வரை இதற்குள்ளேயே இருக்கலாமா? யன்னலூடாக வெளியே கருமையுள் பார்வையை ஊடுருவுகிறேன். அது புக மறுக்கிறது. வீட்டுச் சுவரோடு மோதித் தெறிக்கும் நீர் என் முகத்திலே பன்னீர்

## இணக்க முடியாது

தமிழ் பா. உறுப்பினர்கள் பற்றி இப்போதுமட்டுமல்ல தந்தை செல்வநாயகம் காலத்திலும் ஏராளமான குற்றச்சாட்டுக்கள் புகார்கள் செல்வதுண்டு. குறிப்பாக இயக்கத்தின் தீவிரவாதிகள் தந்தையிடம் அந்த பா. உ. அப்படி நடந்தார்—இந்த பா. உ. இப்படிப் பேசினார் என்று புகார் செய்வார்கள். தந்தையின் மறுமொழி: என்னால் ஆட்களை இணக்க முடியாது. உள்ளதுக்கு வள்ளிசாகத்தான் நடக்க வேண்டும்.

அனுப்பியவர்:
(இளங்கோ.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிக்கிறது. ஓ...... கங்கை கரை கடந்து விட்டது. உலகத்தைப் படம் பிடிக்கும் மின்னலில் கங்கையைப் பார்க்க முடிகிறது. என்ன பயங்கரம்! கங்கைக் கன்னிக்கு ஏன் இத்துணை ஆவேசம் வந்தது. தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் நீர் மட்டம் உயர்ந்து கொண்டே வருகிறது. ஓடவேண்டும். எங்கே ஓடுவது?

வீட்டுக்கு முன்னால் செல்லும் பாதையின் இறக்கத்திலே இறங்கி குறுக்காக உயரும் மேட்டிலே ஏறினால் சக அதிகாரி ஒருவரின் வீடு இருக்கிறது. அதை விட வேறு வழியில்லை.

வெளியே இருள். கொட்டும் மழை. வீசும் புயல் எப்படிப் போவது?... போகாமல் இருக்கவும் முடியாது. சாரத்தை மடித்துக் கட்டிக் கொண்டு தயாராகிறேன். வீட்டிலே இருக்கின்ற பொருட்களில் எதை எடுத்துக்கொண்டு ஓடுவது? தடுமாற்றத்திலும் அவசரத்திலும் எதையும் எடுக்கத் தோன்றவில்லை. உயிரை மட்டுமே பிடித்துக்கொண்டு ஓடுகிறேன், குழி ஒன்றிலே கால் தடுக்கி விழுந்து...... காலிலே பலமான அடி. முக்கி முனகி எழுந்து ஓடுகிறேன்.

பள்ளத்துத் தெருவிலே. இடுப்பளவுக்கு நிற்கிறது நீர் அதிலும் ஒரு சுழியான ஓட்டம். நெஞ்சம் படபடவென்று அடித்துக்கொள்ள கால்களை அவதானமாக எடுத்து வைக்கிறேன்.

உயிரைக் கையிலே பிடித்துக்கொண்டு... என்ன அவலம்? பள்ளத்திலே விழுந்து ஆற்றோடு போய்விடாதபடி மெல்லக் கால்களை எடுத்து வைக்கிறேன். இந்த நேரத்திலென்று தானா அந்த நினைவுகளும் என் மனதில் மெல்ல மெல்ல அடியெடுத்து வைக்கவேண்டும்.

* *

அன்றும் இப்படித்தான்.


ஆகஸ்ட் மாதம்.

இனக்கலவர இருள் சூழ்ந்திருந்த வேளை. மனிதர்கள் என்று பாராமல் தமிழன், சிங்களவன் என்று பேதம் பிரித்து. தமிழனா? உயிர் வாழ்வதா? என்று கேட்டு காடையர்கள் துண்டாடினார்கள். திரும்பும் திசையெல்லாம் தமிழர் அவலக் குரல்களாக — உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டு. உயிர்கள் துண்டாடப்பட்டு. கன்னியர் கற்பழிக்கப்பட்டு தமிழர் வாழ்வு கடலென அலை மோதிய காலம்.

இப்படித்தான் ஓர் இரவு.

இதே வீடு. பூட்டி வைத்துவிட்டு உள்ளே முடங்கிக் கிடந்தேன். நெஞ்சில் பயம். என்ன நடக்குமோ என்று தெரியாமல் தவித்துக் கிடந்தேன். உறக்கம் கண்களைத் தழுவ மறுத்தது. வெளியிலே மட்டுமல்ல மனதுள்ளேயும் புயல்.

கரும் இருள். உலகைப் போர்த்திக் கிடக்கிறது. வீட்டின் முன்னாலுள்ள ஒற்றை விளக்கினால் இருளை விரட்ட முடியுமா? நானும் தனியே! என்னால் என்ன செய்ய முடியும்? துடித்துக்கொண்டிருக்கிறேன். கதவிலே பட பட வென்று தட்டப்படும் ஓசை. "பற தெமிலோ......" என்று தொடங்கிய குரல்கள் எக்காளமிடுகின்றன. இடி முழங்கியது போல் கதவு உடைக்கப்படும் ஓசை. வெளியிலே நூற்றுக் கணக்கானவர்கள் நிற்கிறார்கள் என்பது ஆரவாரத்திலிருந்து புரிகிறது. சமையலறையின் பின்புறக் கதவால் வெளியே பாய ஆயத்தமாகிறேன். எனது பொருட்கள்? இவ்வளவு காலமும் உழைத்துச் சேகரித்த பொருட்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய தமிழ்மகன் செல்கிருன்

—ஊடாடி—

நெஞ்சிலே அவனொரு வீரப்புலியவன்
நேர்மை மிகுந்த தமிழ்மகன்!
வஞ்சகப் பேயின் வாழ்வைஅழிப்பவன்
வசந்தம் கண்டிட உழைப்பவன்!
கொஞ்சிடும் தமிழினில் காதல்கொண்டவன்
கொடுமையைக் காண்கையில் துடிப்பவன்!
அஞ்சிடாப் பேர்வழி ஆண்மைமிகுந்தவன்
போர்நடை போட்டவன் செல்கிருன்!

அடக்கு முறையில் வெகுண்டுஎழுந்தவன்
ஆத்திரம் கொண்டனன் வேங்கையாய்!
"மடக்கிப் பிடித்திட களிமண்நாமில்லை
மனிதன்" என்றே உணர்ந்தவன்!
நடப்பது பற்றியோர் அச்சமேகொண்டிலான்
நமதுமண் காத்திட எழுந்தவன்
சடக்கென எழுந்தனன் கர்ச்சனைபுரிந்தவன்
சபதம் எடுத்தவன் செல்கிருன்!

சென்றிடும் பாதையில் கற்களும்முட்களும்
சீறிடும் பாம்பினைக் காண்பினும்
நின்றிடு வானெனநினைப்பதா? அவனது
நெஞ்சமே அடையுமா நிம்மதி?
வென்றிடும் வரையினில் விழிகளை மூடிடான்
வேறெந்த சுகங்களை விரும்பிடான்
என்றுமே இலட்சியப் பாதையில்தவறிடா
இளைய தமிழ்மகன் செல்கிருன்!

பட்டினி கிடந்து சேர்த்த பொருட்கள், எதை எடுப்பது எதை விடுவது? அவசரத்திலும் தடுமாற்றத்திலும் எதையுமே எடுத்துக்கொள்ளாமல் என் உயிரை மட்டுமே பிடித்துக் கொண்டு இருளிலே மறைகிறேன். கங்கையின் நீர் அடிமட்டத்திலே தவழ்ந்து செல்கிறது.

ஆற்றோரத்து கொடிக்கால்கள் என்னைத் தடம் போட்டு விழுத்துகின்றன. பலமான அடி. வலி காலிலே மட்டுமல்ல இதயத்திலும். எனக்கு மட்டுமா இப்படி ஒரு அவலம். என் தமிழ்க் குலத்துக்கே அல்லவா?

எழுந்து ஓடுகிறேன்.

பள்ளத்துத் தெருவிலே வந்து குறுக்காக மேட்டிலே ஏறிஞல் சக அதிகாரியின் வீடு. அவனும் சிங்களவனல்லவா? அவனே காட்டிக்கொடுத்தால். கட்டி அடித்தால்..... திரும்பி விடலாமா? எங்கேதான் போவது? வேறுவழியே இல்லை. படித்தவன் நண்பன். அப்படிச் செய்ய மாட்டான். நம்பிக்கையை வரவழைத்துக் கொண்டு ஓடிச்சென்று அவன் வீட்டில் கதவைத்தட்டினேன்.

வந்து திறந்த நண்பன் உள்ளே அழைத்துச்சென்றுன். "நண்பன் என்பதால் உன்னைக் காப்பாற்றுகிறேன். ஆஞல் தமிழர்களை அடித்துக் கொல்லத்தான் வேண்டும்" என்றுன். எனக்கு அவன் முகத்தைப் பார்க்கும்போதே கோபமும் அருவருப்பும் முந்தின. மனதுள்ளேயே அடக்கிக் கொண்டு என் நிலையை நினைத்து மௌனமானேன்.

கலவரப் புயல் ஓய்ந்தது.

என் வீட்டுக்கு வந்தேன். பொருட்களில் எதுவுமே இல்லை. அடுப்பிலிருந்து சட்டிபானை இறக்கும் துணித்துண்டைக்கூட கொண்டு போய் விட்டார்கள். தமிழர்கள் என்பதால் கொல்லப் புறப்பட்டவர்கள் தமிழ்ப் புத்தகங்களையா விட்டுவைப்பார்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயிட்டுக்கொளுத்தி விட்டார்கள். என் அரும் தேட்டங்களை.

உடுத்திருந்த உடையையும் உயிரையும் தவிர எல்லாமே போய்விட்டது. வீடு சின்னாபின்னப்பட்டுக் கிடந்தது. 'தமிழர்களைக் கொல்லுவோம்' என்ற வார்த்தைகள் மட்டும் சிங்களத்தில் முன்பக்கச் சுவரிலிருந்து என்னைக் கேலி செய்து கொண்டிருந்தன.

சொந்த மண்ணுக்குப் போன ஆயிரமாயிரம் பேர் நொந்த உள்ளத்தோடு திரும்பி வந்த போது நானும் வந்து சேர்ந்து விட்டேன். அதே பழைய வீட்டுக்கு.

இன்று...

*   *

இடுப்பளவுக்கு நீர் சுழித்து ஓடுகிறது. மேட்டுக்கு வருவதற்குள் நான் பட்ட அவலம் சொல்லிமாளாது. நண்பனின் வீட்டுக்கு வருகிறேன். குளிரில் நடுங்கும் உடலோடு கதவைத் தட்டுகிறேன்.

வந்து திறந்தான் நண்பன். என்னைக் கண்டதும் வியப்புடன் கண்களை அகல விரிக்கிறான் நினைப்பிலே அவனும் ஆழ்ந்து மீளச் சில நிமிடங்கள் எடுத்தன். அவனுக்கும் ஆகஸ்ட் கலவரத்தின் போது நான் ஓடி வந்த காட்சி நினைவுக்கு வந்திருக்க வேண்டும். இப்போது அவன் முகத்திலே குரூரம் இல்லை. புன்னகை. என்ன மகிழ்ச்சியோ?

இந்த நேரத்தில் நான் தங்குவதற்கு இதைவிட வேறு இடமில்லை. முடங்கிக்கொள்கிறேன்.

விடிந்ததும் புறப்படுகிறேன். மேட்டில் நின்று பார்க்கும் போது என் வீடு கழுத்தளவு தண்ணீரில் குளித்துக் கொண்டு நிற்பது தெரிகிறது. அங்கு போக முடியாது. போனால் நான் இல்லை. பேராதனைச் சந்திக்கு வந்து பொங்கிச் சுழித்து வெறி கொண்டு ஓடும் கங்கையைப் பார்த்துக் கொண்டு நிற்கிறேன். செல்வம் மிகப்பெற்ற திமிரோடு நடப்பது போல் கங்கைக் கன்னியும் போய்க்கொண்டிருந்தாள்

ஓலைக் கூரைகள்...... மரங்கள்... பாத்திரங்கள் எல்லாவற்றையும் வாரிச் சுருட்டிக் கொண்டு சுழித்துப் புரண்டு போகிறது கங்கை. எனது பொருட்கள்? தண்ணீரில் மூழ்கிவிட்ட வீட்டில் என்ன தான் மிஞ்சும்? எல்லாவற்றையுமே கங்கை வாரிச் சென்றிருக்கும். எனது புத்தகங்கள் எல்லாம் சின்னாபின்னப்பட்டு அழிந்திருக்கும்.

இரண்டே நாட்களில் கங்கையின் வேகம் தணிந்து நீர் மட்டம் கீழிறங்கியதும். கிணற்றில் விழுந்த கன்னி குற்றுயிரும் குறை உடையுமாக வெளியே தூக்கும் போது இருக்கும் நிலையில் நிற்கிறது எனது வீடு. உள்ளே போய்ப் பார்க்கிறேன்.

எல்லாவற்றையுமே கங்கை கவர்ந்து சென்று விட்டது. சுவர் கூட இடிந்து இரண்டு நாட்களாக கங்கைக் கன்னி ஆடிய சதிராட்டத்தின் தடங்கள். இப்போது என் நிலை...

உடுத்தியிருக்கும் இந்த சாரமும் உயிரும்தானே மிஞ்சியது. ஆகஸ்ட் கலவரத்தில் போல பட்ட காலிலேதான் படுமா? எவ்வளவு துன்ப வேதனை. நான் குசினிக்குள் போய்ப் பார்க்கிறேன். சுவரோடு அணைந்தபடி அம்மி மட்டும்தான் மீதமிருக்கிறது. அதை மட்டுமாவது விட்டுச் சென்றதே... காடையர்கள்?

(யாவும் கற்பனையல்ல)

---

சிறுவர்களுக்கு ஒரு குட்டிக் கதை:

# "ஏமாற்றாதே! ஏமாறாதே!"

புடவைக்கடை முதலாளி ஒருவர் கடைக்குள் இருந்த தன் மகனைக் கூப்பிட்டு 'இதோ! பார் அந்த மூலையில் ஆண்டுக்கணக்காக கிடந்த விலைப்படாத துணியை இறக்குமதி செய்த துணி என்று சொல்லி ஒரு நிமிடத்தில் விற்றுவிட்டேன். நீ உள்ளே என்ன செய்து கொண்டிருந்தாய்? இந்த வியாபார தந்திரங்களை நீயும் படிக்கவேண்டாமா? அதை வாங்கியவன் ஒரு ஆட்டு மூளைக்காரன். இந்தா பார் புதிய பத்து ரூபாய் நோட்டுக்கள். இதுதான் வியாபாரம். பார்த்துக்கொள். என்னைப்போல் நீயும் செய்ய கற்றுக்கொண்டால்தான் பணம் தேட முடியும்." என்று மகிழ்ச்சியோடு சொன்னார்.

"ஆனால்..." மகன் சொன்னான்.

"என்ன ஆனால்..." தகப்பன் கேட்டார்.

"ஆட்டு மூளைக்காரன் யாரென்பதுதான் சந்தேகமாயிருக்கிறது. இந்த நோட்டுக்களை நன்றாகப் பாருங்கள். கள்ள நோட்டுக்கள்... என்றான் மகன்.

முதலாளி திடுக்கிட்டு எழுந்து, நோட்டுக்களை புரட்டிப் புரட்டிப் பார்த்தார். அவர் முகம் கறுத்தது.

*   *   *

ஏமாற்றுக்காரனை இன்னொருவன் ஏமாற்றிவிட்டான். வியாபாரத்தில் இது ஒன்றும் புதுமையல்ல.

ஏன்? செல்வத்திலும், சிரிப்பிலும் மூழ்கிக் கிடக்கும் பல மனிதர் பணம் தேடுவதற்கு இத்தகைய வழிகளைத் தான் கையாளுகிறார்கள். சில வேளைகளில் ஏமாற்றுப்படுகிறார்கள்; இல்லாமையிலும் மூழ்கிப்போகிறார்கள்.

யாரால் திறமையாகப் பொய் சொல்ல முடியும்? என்பதுதான் இங்கே பிரச்சினை.

செல்வன் எஸ். பி. கே. வேலழகன்,
தென்மட்டுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் குழந்தையை வளர்ப்பது எப்படி?




குழந்தையைக் கண்டித்து வளர்ப்பதா? செல்லமாக வளர்ப்பதா? இன்றைய பெற்றோர் முன் உள்ள பிரச்சினை இது. உண்மையில் குழந்தையைக் கண்டிப்புடன் வளர்ப்பதோ, செல்லம் கொடுத்து வளர்ப்பதோ முக்கியமல்ல, குழந்தையின் நல்வாழ்வில் எவ்வளவு ஆர்வம் காண்பிக்கின்றனர் என்பதும் அதனால் குழந்தை எத்தகைய மனோநிலை அடைகிறது என்பதும் தான் மிகவும் முக்கியம்.

காலத்திற்குத் தக்கபடி கண்டிப்பின் தன்மையும் மாறுவதுதான். பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் அடக்கம், ஒழுக்கம் என்பன மிகவும் கண்டிப்பாக கடைப்பிடிக்கப்பட்டன. இருபதாம் நூற்றாண்டில் நிலைமை மாறி உள்ளது. தலைசிறந்த கல்வி ஆராய்ச்சியாளர்களான யோன்டிவே, வில்லியம் கிவ் பேட்ரிக் போன்ற நிபுணர்கள் புதிய கல்விமுறைகளைக் கூறியுள்ளார்கள். ஃபிராய்ட் என்பவர், குழந்தையைப் பயமுறுத்துவதாலும் முரட்டுத்தனமாக நடத்துவதாலும் குழந்தையின் பண்பு மாறி நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டுவிடலாம் என்கிறார். கடமையினின்றும் தவறியும் குற்றங்கள் புரிந்தும் திரியும் குழந்தைகளைப் பற்றிய ஆராய்ச்சிகளிலிருந்து அவர்கள் அநேகர் ஆரம்பத்தில் பெற்றோரின் அன்பையும் சலுகையையும் பெறாதவர்கள் என்று தெரியவந்தது. இந்தக் கண்டுபிடிப்புக்குப் பின்னர் குழந்தைகளைக் கண்டிப்புடன் வளர்க்கும் முறை குறைக்கப்பட்டு குழந்தையின் தேவைகளை நிறைவேற்றும் முயற்சிகள் கூட்டப்பட்டன. ஆல்ரிச்ஸ், பவர்ஸ், கெஸ்ஸல் போன்ற அமெரிக்க குழந்தை நோய் வல்லுநர்கள் மேற்படி தத்துவத்தை குழந்தை மருத்துவத்தில் புகுத்தினர்.

குழந்தைக்கு செல்லம் கொடுத்து கெடுத்து விடக்கூடாது என்ற டாக்டர்கள் அனைவரும் இப்பொழுது குழந்தையின் தேவைக்கும் விருப்பத்திற்கும் தக்கவாறு அதனிடம் அன்பு காட்டியும் உணவு கொடுத்தும் வளர்க்க வேண்டும் என்கிறார்கள்.

இத்தகைய மாறுதல்களைப் பின்பற்றுவதால் அநேக பெற்றோர்களும் அவர்களின் குழந்தைகளும் நன்மையே அடைந்துள்ளனர். ஆனால் இந்த முறைகள் அனேக பெற்றோருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன.

தங்கள் குழந்தைப் பருவத்தில் தாங்கள் எவ்வாறு வளர்ககப்பட்டார்களோ அவ்வாறு தங்கள் குழந்தைகளையும் வளர்க்க முயல்வது இயற்கையே.

கல்வியறிவு மூலமும் பிறரிடம் கேட்டு அறிவதன் மூலமும் பெற்றோர் தங்கள் பழைய கொள்கைகளை ஓரளவு மாற்றிக்கொள்ளலாம்.

திருமதி எஸ். பி. கே. இராசமணி,
தென்மட்டுவில்.

# மருந்தாகும் காய்கள்

உணவாகப் பயன்படும் காய்கறிகளில் சில நமக்கு மருந்தாகவும் பயன்படுகின்றன. அவை:

வாத சம்பந்தப்பட்ட வியாதிகளை அவரைக்காய் கண்டிக்கும். நீரிழிவுக்காரர்கள் இதை சமைத்து உண்ண நீரிழிவு கட்டுப்படும். அவரைப் பிஞ்சு இரத்தக் கொதிப்பைக் குறைக்கும்.

உருளைக் கிழங்கிலுள்ள யூரிக் அமிலம் சுண்ணாம்பு முதலியவற்றை கரைத்துவிடும் தன்மையுடையது. 'ஸ்கர்வி' என்னும் சரும நோய் வராமல் தடுக்கும்.

தொத்து நோய்கள் வராமல் தடுக்கும் ஆற்றல் 'காரட்டு'க்கு உண்டு. கிருமிகளை அழிக்கும் வல்லமையும் இதற்கு இருக்கிறது.

நாவில் உள்ள ரணங்கள் குணமாக கோவைக் காயை பச்சையாக மென்று தின்னலாம். கரப்பான் வியாதியும் இதனால் நீங்கும்.

கத்தரிக்காயை அதிகமாக உண்ணக்கூடாது. கரப்பான் வரும் என்று சொல்வார்கள். இருப்பினும் அம்மை நோய் வராமல் தடுக்கும் ஆற்றல் இதற்கு உண்டு.

கண் பார்வைக்கும், பல் உறுதிக்கும், சரும நோய் நிவாரணத்திற்கும், நோய் வராமல் இருப்பதற்கும். இரத்த சுத்திக்கும் இரைப்பை வியாதிக்கும் ஏற்றது தக்காளி.

மார்புச் சளியையும், கபத்தையும் சுண்டைக்காய் போக்கும். வயிற்றிலுள்ள கிருமிகளை கொல்லும் ஆற்றல் இதற்கு உண்டு சுண்டைக்காய் வற்றல் பித்தத்தைப் போக்கும் வாயு உபத்திரவத்தைக் கண்டிக்கும்.

நன்றி: மங்கை,
அனுப்பியவர்:
திருமதி க. திலகராணி, கிரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரத் தமிழ் ஈழத்தில்தான் பொங்கல் இனிக்கும்

புதுவருடம் பிறந்து தைத்திருநாளும் மலர்ந்து விட்டது. கடந்த ஆண்டு எமக்கு ஏற்பட்ட இன்னல்கள், இடர்கள், துன்பச் சுமைகள் இவ்வாண்டிலும் ஏற்பட்டுவிடக் கூடாது என்ற எண்ணத்தோடுதான் ஒவ்வொரு தமிழ் மகனும் புதுவருடத்தை எதிர்நோக்கி நிற்கிறன். அந்த அளவுக்கு தமிழர் நெஞ்சங்களை வருந்த வைக்கும் பல சம்பவங்கள் கடந்த ஆண்டில் நிகழ்ந்து விட்டன.

அஹிம்சை முறையில் அரசியல் அமைப்பை எதிர்த்து துண்டுப் பிரசுரம் விநியோகித்தமைக்காக எமதருமை உணர்ச்சிக் கவிஞரும், மாவை சேனாதி ராசாவும் இன்னும் பல தமிழ் இளைஞர்களும் கைது செய்யப்பட்ட துர்ப்பாக்கிய சம்பவம் கடந்த ஆண்டில்தான் நிகழ்ந்தது.

காந்தியம் பற்றி ஓயாமல் பேசிவரும் 'தர்மிஸ்ட்'டரின் (தம்இஷ்டம்) ஆட்சியில்தான் இவ்விளைஞர்கள் காலவரையறையின்றி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் ஈழத்தின் தென்பகுதி (மட்டுநகர்) மக்களை இயற்கை தன் சீற்றத்துக்கு இலக்காக்கிய மிகக் கொடிய சம்பவம் கடந்த ஆண்டில்தான் நடந்தன.

வல்வையிலும், இன்னும் பல தமிழ்ப் பகுதிகளிலும் பொலிஸும், இராணுவமும் தன் காட்டுத்தர்பாரை கட்டவிழ்த்து மக்களையும் அவர்களின் உடைமைகளையும் அடித்து நொறுக்கிய அநியாயமும் கடந்த ஆண்டில்தான் நடந்தன. (இப்படி இன்னும் பல துயரங்களை கடந்த ஆண்டில் அனுபவித்து விட்டோம்.

சிறைக் கதவுகளுக்குள் அடைபட்டு இளைஞர்கள் வாடுகின்றனர்.

மட்டுநகர் மக்கள் பொருள் இழந்து, வளம் இழந்து, வீடிழந்து அகதிகளாக மாறி நிற்கின்றனர்.

இன்னும் என்னென்ன பொலிஸ்—இராணுவக் கொடூரங்கள் நிகழ்ந்து விடுமோ என யாழ். மக்கள் அஞ்சி வாழ்கின்றனர்.

இந்நிலையில் இப்பொங்கல் நன்னாள் நமக்கு சுவைக்குமா?

அடிக்கடி 'அடி'படும் அடிமை நிலையில் வாழ்ந்துவரும் எமக்கேது திருநாள்?

சுதந்திரத் தமிழ் ஈழம் மலர்ந்து 'எமக்கு நாமே தலைவன்' என்ற நிலையை ஏற்படுத்தி, என்று நாம் பொங்கிச் சுவைக்கின்றோமோ அன்றுதான் எமக்கு பொங்கல் இனிக்கும்.

அந்த நன்னாள்—தமிழீழம் எமக்கு சொந்தமாகும் திருநாள் அதிவிரைவில் மலர்ந்து, அடிமை விலங்கொடித்து ஆர்ப்பரிக்கும் சுதந்திர வீரர்களாக நாம் பவனிவரும் பொன்னாளை எதிர்நோக்கி அதற்கான பணிகளில் நம்மை நாம் முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள திடசங்கற்பம் செய்து கொள்வதே தைப் பொங்கல் தினத்தில் ஒவ்வொரு தமிழனும் செய்துகொள்ளவேண்டிய முதற் பணியாகும்.

'பொன்னரி'

---

சுதந்திரத் தமிழ் ஈழத்தில் பொங்கிச் சுவைக்கும் நிலை மிக விரைவில் மலரவேண்டும் என தமிழ் மக்களுக்கும், எமது வாசக நல் நெஞ்சங்களுக்கும் பொங்கல் வாழ்த்துக் கூறுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் பரிசு



எம்.ஐ.எம்.முஸம்மில்

இன்றுதான் மாட்டுப் பொங்கல்! நேற்றுத்தான் பொங்கல் விழா சிறப்பாக முடிந்திருந்தது. பொங்கல் விழா முடிந்து விட்டதாலோ பொங்கல் பரிசாகவோ விவசாயிகளுக்கு மட்டுமல்ல, பயிர் பச்சைகளுக்கெல்லாம் வானம் மழை நீரைச் 'சோ' வெனப் பொழிந்து கொண்டிருந்தது.

இலுப்படிச்சேனைக் கிராமத்திலே வசிக்கும் கந்தசாமிப் போடியார் அன்று மாட்டுப் பொங்கலைச் சிறப்பாக நடத்தி முடித்திருந்தார். அவர்தான் அந்த ஊரிலேயே வசதிபடைத்தவர். ஒரு பெரிய மாட்டுப் பட்டியையே வைத்திருந்த அவருக்கு நூற்றுக் கணக்கான ஏக்கர் விவசாயக் காணிகளும் சொந்தமாயிருந்தன. அந்த வயல்களில் வேலை செய்வதற்கென்று அவரது முகாமையின் கீழ் ஏராளமான விவசாயிகளும் மாடுகளுடன் மாடாய் உழைத்து ஓடாய்ப் போய்க் கொண்டிருக்கின்றார்கள்.

கந்தசாமியின் பட்டி மாடுகள் நீராட்டப்பட்டு அவற்றின் கொம்புகளிலே சூட்டப்பட்ட பூக்களுடனும் தழைகளுடனும் காட்சியளித்தாலும் பகுத்தறிவற்ற அவற்றின் மனங்களில் சோகம் இருப்பதை அவற்றின் முகபாவனையே எடுத்துச்சொல்லிக் கொண்டிருந்தது.

சில சமயங்களில் சிலருக்கு புத்தி மிருகங்களை விடவும் மழுங்கிப் போவதும் ஏனோ தெரியாது.

சென்ற பொங்கல் விழாவில் அன்புடன் தங்களைக் கவனித்த வேலன் இந்த முறை கவனிக்கவில்லையென்ற கவலையாகவும் இருக்கலாம். அந்த மாடுகள் ஏதோ பழக்க தோசத்தினாலோ என்னவோ தாம் அன்று உண்ட உணவுகளை அசைபோட்டவாறு நின்று கொண்டிருந்தன.

பெய்து கொண்டிருந்த பெருமழை தங்கள் பிச்சுக் குடிசைக்குள் எந்தவித ஈவிரக்கமுமின்றி 'சோ' வெனக் கொட்டி நிலத்திலே மெழுகியிருந்த களிமண்ணை கரைத்துக் கொண்டிருந்ததை ஒருபுறமும், பொங்கல் கழிந்து மறுநாளே கடலுக்குப் போன தனது கணவனுக்கு என்ன நேர்ந்து விடுமோ என்ற கவலையை மறுபுறமும் வைத்துச் சிந்தித்தவாறு கந்தசாமியின் வீட்டு மாடுகள் இரையை அசை போட்டுக் கொண்டிருப்பதைப் போல கடந்த கால வாழ்வை அசை போட்டுக் கொண்டிருந்தாள் வேலனின் மனைவி கருப்பம்மா!

சென்ற வருடப் பொங்கலுக்கு மாட்டுப் பொங்கலைச் சிறப்பாக கந்தசாமிப் போடியாரின் வீட்டில் நடத்தி வைத்த அவளது கணவன் இன்று அந்தப் பாக்கியத்தை இழந்து கடலுக்குத் தனது புதுத் தொழிலுக்குப் போய் விட்டான். அவன் தனது பரம்பரை விவசாயத் தொழிலை விட்டு விட்டு இப்புதிய மீன்பிடித் தொழிலில் சேர்ந்து கொண்டதே ஒரு பெரிய கதை.

அன்று கந்தசாமிப் போடியாரின் மகளுக்குப் பூப்பு நீராட்டு விழா. அந்தச் சந்தோஷத்தில் கந்தசாமியும் அவரது மனைவியும் உலகையே மறந்து உலவிக் கொண்டிருந்தார்கள். அவரது வயல்களிலே வேலை செய்யும் அத்தனை விவசாயிகளும் அவர்களது மனைவியர்களும் கந்தசாமிப் போடியாரின் வீட்டிலேயே தான் இரவு பகலாக ஓடி ஆடி எல்லா எடுபிடி வேலைகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

"ஏய் வேலு, என்ன உண்டமனுசிக்கி பெரிய தலைக்கிறுக்கே. இத்தனை பொம்பளயளும்வந்துஇந்த வேலவெட்டிகள செய்யகுள்ள உண்டமனுசிக்கி வர ஏலாதே" என்று அந்த மகிழ்ச்சித் திளைப்பில் கேட்டு விட்டார் கந்தசாமிப் போடியார்.

வேலனுக்கு தனது இருதயத்திலே சுரீர் என்று கந்தசாமிப்போடியாரின் வார்த்தைகள் தைத்தாற்போல் இருந்தன. அவனது மகள் பிரசவ வேதனையால் துடித்துக் கொண்டிருந்தது அவனது நினைவுகளில் மீண்டும் வந்து நிலைபெற்று நின்றது.

> **உலகில் பெரிய வாவி**
>
> வட அமெரிக்காவில் உள்ள Lake Superior தான் உலகிலுள்ள பெரிய வாவி. இது 82,350 சதுர கிலோ மீற்றர் பரப்பு உடையது. இதில் மூன்றில் இரண்டு பங்கு ஐக்கிய அமெரிக்காவிலும் மூன்றில் ஒரு பங்கு கனடாவிலும் உண்டு.

வேலன் தனது மகளை அவனைப் போல் ஒரு விவசாயிக்கு திருமணம் செய்து வைத்து ஓராண்டுதான் ஒழு முடிந்திருந்தது. அவளது கணவன் அவளை சிற்றின்பம் காணும் ஒருபொருளாகவே கருதினான். அவளுக்கு வேறு எந்த ஒரு உதவி ஒத்தாசையையும் புரிய வேண்டும் என்ற எண்ணமேயற்று அவன் வயல் வேலை செய்யும் போடியார் வீட்டிலேயே எந்நாளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தான். அங்கு வயலில் மட்டுமல்ல அந்தப் போடியார்வீட்டிலும் வேலைக்காரனுகவே இருந்து கொண்டிருந்தான். இப்போதும் அவன் மனைவி-வேலனின் மகள்பிரசவ வேதனையால்துடிதுடித்துக் கொண்டிருப்பதைக் கூடக் கவனிக்காமல் அவனது போடியார் வீட்டில் எடுபிடி வேலைக்குப் போயிருந்தான். தனது மகளின் பிள்ளைப் பேறுக்கான அலுவல்களையெல்லாம் வேலனின் மனைவிதான் இப்போ கவனித்துக் கொண்டிருந்தாள். வேலனும் அங்கேயே இதுவரைஇருந்துவிட்டு அதை விட்டுவிட்டு வர மனம் விரும்பாத போதும் தனது போடியார் வீட்டில் நடக்கும் ஒரு நல்ல விழாவுக்கு தானும் தலையைக்காட்டிக் கொள்ள வேண்டுமே என்றுதான் ஓடி வந்திருந்தான். அந்த நிலையில் இருந்த அவனுக்கு கந்தசாமிப் போடியாரின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும்அவனதுதன்மானம் மேலோங்கி நின்றது. அவனது எல்லா உறுப்புகளுமே வேலை செய்யத் தொடங்கின.



"போடியார் நாங்கள் உங்கட வயிலதான் வேலை செய்யிறம். நீங்க தாற கூலி அப்படி வயல்ல வேலை செய்யிறதுக்குத் தானே ஒழிய உங்கட வீட்டில வேலை செய்யிறதுக்காகவல்ல" என்று வேலன் உணர்ச்சி வசப்பட்டுக்கூறிவிட்டதைக் கேட்ட கந்தசாமிப் போடியார் வாயடைத்துமௌனியாகிவிட்டார்,

கந்தசாமிப்போடியாருக்கு அளவுக்கதிகமான ஆத்திரம் வந்தால் இப்படித்தான் பெட்டிப் பாம்பாக அடங்கிவிடுவார், இது அவரிடம் வேலை செய்யும் அத்தனை விவசாயக் கூலியாட்களுக்குமே தெரியும். அதையே அவர்கள் தங்களுக்குள் குசு குசுத்துக் கொண்டார்கள்.

இந்தச்சம்பவத்தைத் தொடர்ந்து வந்த பொங்கல் நாள்! அதுதான் கந்தசாமிப் போடியாரின் மகள் பூப்படைந்த பின்வந்த முதலாவது பொங்கல்! ஒவ்வொரு வருடப் பொங்கலுக்கும் தனது வயலிலே வேலை செய்யும் எல்லா விவசாயிகளுக்கும் மருதமுனை வெள்ளை வேஷ்டி ஒவ்வொன்றை வாங்கிப் பரிசளிப்பது கந்தசாமிப் போடியாரின் வழக்கம்! வருடம் முழுவதும் தனதுவயல்களிலே வேலை செய்யும் விவசாயிகளின் உழைப்பைச் சுரண்டி சுகமாக வாழும் அவருக்குஇப்படி அன்பளிப்புச் செய்யும் ஒரு வேட்டி பெரிதல்ல! ஆனால்அதை அறியாத அந்த ஏழை விவசாயிகளுக்கு அது ஒருபெரிய பொங்கல்பரிசு தான்!

அந்தப் பொங்கலுக்கு வழமையாகக் கொடுத்து வந்த அந்தப் பொங்கல் பரிசைக் கூடஎல்லாவிவசாயிகளுக்குமே கொடுக்க மறுத்து விட்டார் கந்தசாமிப்போடியார். வேலன் தன்னுடன் கோபித்தமையால் தான் இம்முறை எவருக்குமே அந்தப் பரிசு கொடுக்கப்படவில்லை என்று எல்லாருக்குமே தெரிவித்துவிட்டஅவர் வேலன் மீது மற்ற விவசாயிகளை ஆத்திரமடையச் செய்து தனது பழிக்குப்பழி வாங்கலைச்செயற்படுத்த முனைந்தார்.

ஆனால் அவர் எதிர்பார்த்தது நடைபெறவில்லை. எல்லா விவசாயிகளுமே வேலன் தலைமையில் ஒன்று சேர்ந்தார்கள். "போடியார் உங்களுக்கு பொங்கல் கொண்டாடுற தகுதியே இல்லைப் போடியார். உண்மையாக வியர்வை நிலத்தில் இந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– மணிக்கதை –

# தார்மீகம்

— மணி —

ஜெயராம் மிக அமைதியான மனிதன். அவன் சனங்களிடம் பேசுவதே குறைவு. ஆனால் திடீரென்று கொஞ்சக் காலமாக, தெருவில் கண்ட கண்ட இடத்தில்எல்லாம் நின்றுகொண்டு, "நான் மிகவும் நல்ல மனிதன் தர்ம நியாயப்படி நடப்பவன், என்னை நம்புங்கள்!' என்று கூறுகின்றான்.

ஜெயராமுக்குஎன்ன வந்துவிட்டது? ஏன் இப்படியெல்லாம் பேசுகிறான்? அவனை யாரும் கெட்டவன் என்றோ தர்மநியாயம் இல்லாதவன் என்றோ கூறவில்லையே. அப்படியிருக்க ஏன் இப்படித் தானாகவே அடிக்கடி தன்னைப்பற்றிக் கூறுகிறான்.

பல நாட்கள் ஜெயராம் இப்படிப் பேசவே ஜனங்களுக்கு அவன் மேல் சந்தேகம் ஏற்பட்டது. இவன் எதையோ மூடி மறைக்கிறான் என்று அவர்கள் நிச்சயமாக நம்பினர். எனவே இதன் உண்மையை அறியவேண்டும் என்று எண்ணிய சிலர் ஒரு நாள் இரவு அவன் வீட்டிற்குச் சென்று மறைந்திருந்துகவனித்தனர்.

அவர்கள் சந்தேகித்தது உண்மையாகவே போய்விட்டது.

அங்கே ஒரு பெரிய கொள்ளைக் கூட்டமே இருந்தது. ஜெயராம் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு கட்டளையிட்டான்.

பக்கத்து வீட்டுக்காரனின் காணிக்குள் போய் வேலியைக் கூட்டி அடைக்கச் சொன்னான்,

கிராமப்புறத்தில் கடை போட்டிருப்பவர்களிடம் போய்கொள்ளையடிக்கச்சொன்னான்.

தட்டிக்கேட்கக் கூடியவர்கள் என்று நினைத்த சிலரை தந்திரமாகக் கொன்றுவிடும்படி கூறினான்.

ஜெயராம் இப்படிக்கூறவே ஒருவன் 'பிறருக்குத்தெரியாமல் இதையெல்லாம் எப்படிச் செய்வது?' என்று கேட்டான்.

"அதற்குத்தான், கோடு கச்சேரி, விநோதச்சந்தை, நீர்விளையாட்டு இப்படி எத்தனையோ வேடிக்கைகள் இருக்கின்றதே. அவற்றைக் காட்டினால் ஜனங்கள் கவனம் எல்லாம் இவற்றில் திரும்பிவிடும், உங்கள் வேலைகளைச் சுலபமாகச் செய்யலாம்" என்றான் ஜெயராம்.

மறுநாட்காலை வழக்கம் போல் "நான் நல்லவன் என்னை நம்புங்கள்" என்ற பல்லவியைத் தொடங்கினான் ஜெயராம். யாருமே அவன் பேச்சைக்காதில் போட்டுக் கொள்ளவில்லை.

---

உழைச்ச உழவர்களாகிய எங்களுக்குத்தான் அந்தப் பொங்கலில் பூரண உரிமையிருக்கு. ஆனா .. எங்கட உழைப்பை உறிஞ்சி நீங்கபொங்கல்கொண்டாடுறீங்கள். ஆனா... இனிமேல் அது நடக்காது" என்றுபெரும்பாலான விவசாயத் தொழிலாளர்கள் ஒருமித்தகுரலில் கூறிக் கொண்டு வெளியேறியவர்கள் தான் சொந்த நிலமில்லாது இன்று மீன்பிடித் தொழிலில் இறங்கி விட்டார்கள்.

அப்படித்தான் வேலனும் தான் ஒரு வருடமாக மேற்கொண்டு வரும் அந்த மீன் பிடித்தொழிலுக்குப் போயிருக்கின்றான். அவனது வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்த அவன் மனைவி கருப்பம்மா மழை ஓய்ந்ததும் சிந்தனையிலிருந்து விடுபட்டாள்.

அன்று இரவு பத்து மணி வரை வேலனின் வருகையை எதிர்பார்த்திருந்துவிட்டு ஏமாற்றத்துடன் வீடு நிறைய மழை ஒழுக்கு ஏற்பட்டிருந்ததால் ஒரு நீண்ட மரப் பெட்டி மேலே ஏறிப் படுத்துக்கொண்டாள் கருப்பம்மா. அவளது கண்கள் உறங்குவது போலக் காட்சியளித்தாலும் எண்ணமெல்லாம் கடலுக்கு மீன் பிடிக்கப் போன அவளது கணவனின் வருகையைப் பற்றியே இருந்தது.

இரவு பன்னிரண்டு மணியிருக்கும். அவளது அந்தக் குடிசைக் கதவில் பலமாகத் தட்டிக் கொண்டிருந்தது ஒரு உருவம். திடீரெனக் கண் விழித்த கருப்பம்மா தன் கணவனின் வருகையைப் புரிந்து கொண்டு ஆசையுடன் கதவைத் திறந்தாள். அங்கே அவள் கண்ட காட்சி?...

அவளது கணவன் வேலனுடன் மீன் பிடிக்கப் போகும் நாகன் நீரில் மூழ்கி நனைந்தவாறு 'ஓ' வென அழுது கொண்டிருந்தான். அவனைப் பின் தொடர்ந்து ஒரு சனக்கூட்டம். கருப்பம்மாவும் வாய்விட்டு அழுதே விட்டாள்.

வேலனும் அவனது சக தொழிலாளர்களும் மீன் பிடிக்கச் சென்ற வள்ளம் கடலில் வீசிய புயலுக்குள் சிக்கிப் புரண்டு விட்டதாம். அதிலிருந்த நாகன் ஒருவாறு தப்பித்தவறி கடவுளின் அருளால் நீந்திக்கரைசேர்ந்து விட்டான். கேவிக்கேவி அழுதவாறு நாகன் சொன்ன இந்தச் செய்தியைக் கேட்ட கருப்பம்மாவின் ஒப்பாரி அந்த ராத்திரியிலே அப்படியே ஊர்ச் சனங்களையெல்லாம் கூட்டிவிட்டது.

"இந்த நெருப்பு கந்தசாமிப் போடியச் சும்மா விடாது சனங்களே. அவன் தான் போன பொங்கலுக்கு என்ர புருசனையும் இன்னும் சிலரையும் பழிவாங்கி அவங்க செஞ்சி வந்த பரம்பர உழவுத் தொழிலில இருந்து அவங்கள விலக்கி வெச்சிட்டான். அப்படி அவன் செய்திருக்காட்டி என்ர ஆசை அத்தான் இன்னேரம் மாட்டுப் பொங்க முடிச்சிக்கிட்டு நிம்மதியா வீட்டில தூங்குவாரே" என்று அழுதவாறு கடலை நோக்கி ஓடிக் கொண்டிருந்தாள் கருப்பம்மா.

(யாவும் கற்பனை)

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேடை

## குணசேனு நிறுவனம்

குணசேனு நிறுவனப் பத்திரிகைகள் தொடர்ந்து தமிழர்களுக்கு எதிரான செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிடுகின்றன. யாழ்ப்பாணத்தில் வங்கிக் கொள்ளை ஒன்றை அடுத்து பொது மக்கள் மீது பொலீசார் நடத்திய மிகக் கேவலமான—கோழைத்தனமான தாக்குதலை இருட்டடிப்புச் செய்தது போல, வசாவிளானில் இராணுவம் நடத்திய தாக்குதலையும் ஒரு மூலைக்குள் அரையும், குறையுமாகப் போட்டு மறைத்து விட்டன.

அதே சமயம் தமிழாசிரியர் மீது சேற்றை வாரி வீசிய மந்திரி சிறில் மத்தியூவை ஆதரித்து 'சன்' பத்திரிகை ஒரு நடுப்பக்கக் கட்டுரையை அண்மையில் வெளியிட்டு இருந்தது. இதே பத்திரிகைதான் ஆவணி 77 கலவரத்துக்கு இரண்டொரு நாட்களுக்கு முன் கடைந்தெடுத்த இனவாதி திரு எப். ஆர். ஜயசூரியாவின் பச்சை தமிழ் விரோத கட்டுரைத் தொடர் ஒன்றை வெளியிட்டதென்பதை இதற்கிடையில் யாரும் மறந்திருக்க முடியாது.

குணசேனுப் பத்திரிகை நிறுவனம் இந்த நாட்டில் பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்தை நிலைநிறுத்த உழைத்து வருகிறதென்பது எல்லோரும் அறிந்த விடயம். அதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. ஆனால் தனது பத்திரிகைகளுக்கு தேசியப் பத்திரிகைகள் என்ற பெயரைச் சூட்டி, அதன் மறைவில் சிங்கள பேரினவாதத்தை வளர்ப்பதைத் தான் நாம் கடுமையாக ஆட்சேபிக்கிறோம்.

## அமிரின் வலியுறுத்தல்

வரவுசெலவுத் திட்டக் குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், ஒரு கட்டத்தில் ஒரு முக்கிய உண்மையை வலியுறுத்திப் பேசியிருக்கிறார். தமிழர் விடுதலைக் கூட்டணி, சிங்கள மக்களுக்கு எதிரான ஒரு கட்சி அல்ல என்று வற்புறுத்தி இருக்கிறார். இந்தக் கருத்தைக் காலம் சென்ற டாக்டர் நாகநாதன் அவர்கள் அந்த நாட்களில் பாராளுமன்றத்துக்கு உள்ளும் புறமும் அடிக்கடி வலியுறுத்திக் கூறி இருக்கிறார். 'நாங்கள் எதிர்ப்பது சிங்கள ஏகாதிபத்தியத்தையே ஒழிய சிங்கள மக்களையல்ல' என்பதே அவர் அடிக்கடி பிரயோகிக்கும் கூற்றும்.

## தமிழ் எதிரி

யாழ்ப்பாண மாநகர சபையின் நிர்வாகம் துரையப்பா மேயராக இருந்த பொழுது அவருக்கு வால்—கால் பிடித்தவர்களாலும், அவரால் நியமிக்கப் பட்டவர்களாலும் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தப்பட்டு வருகிறது. தமிழ் மக்களின் முதல் நம்பர் எதிரியான துரையப்பாவின் சிலை மாநகர சபைக்கு திருஷ்டி பரிகாரமாக மாநகர சபை முன்றலில் தொடர்ந்தும் இருந்து வருகிறது இதே போல இரவோடிரவாக யாழ்ப்பாண விளையாட்டரங்கை, 'துரையப்பா விளையாட்டரங்கு' என்று செய்த பெயர் மாற்றமும் தொடர்ந்து நீடிக்கிறது. தெரு வீதி ஒன்றும், துரையப்பாவின் பெயரால் தொடர்ந்து அழைக்கப் படுகிறது. இந்த அவமானங்களைக் களைந்தெறிய யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினர் திட்டவட்டமான நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும்.

## மௌனம் ஏனோ?

பாராளுமன்ற நடவடிக்கைகளைக் கவனிப்பவர்களுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமிர் செயலாளர் சிவா நீங்கலாக, மற்றவர்கள் பாராளுமன்றத்தில் இருக்கிறார்களா என்ற சந்தேகத்தை உண்டாக்குகிறது. பண்டிதர் இடைக்கிடை பேசுகிறார். ஆடிக்கொருதரம் ஆவணிக்கொருதரம் திருமலை சம்பந்தர், மன்னார் சூசைதாசன் பேசுகிறார்கள். சென்ற பாராளுமன்றத்தில் அடிக்கடி கோதாவில் இறங்கி அன்றைய ஆட்சியாளர்களோடு மோதிய, இன்றைய மானிப்பாய் பா. உ. திரு. தர்மலிங்கம் அவர்களின் பேச்சையும் காணோம், மூச்சையும் காணோம். இவரைவிட மோசம் இன்னும் சில பா. உ.க்கள் வாய் திறந்தால் முத்துக்கள் உதிர்ந்து விடும் என்ற பயத்தில் மிகக் கடுமையான மௌன விரதத்தை அவர்கள் அனுட்டிப்பதாகத் தெரிகிறது.

பாராளுமன்றத்தில் தொடர்ந்து பதினைந்து, இருபது வருடங்கள் இருப்பவர்கள் பேசிக் களைத்து—இனிப் பேசிப் பயனில்லை என்று நினைக்கிறார்களோ தெரியவில்லை.

## தமிழ் நாட்டு ஏடுகள்

தமிழ் நாட்டு பெரும்பாலான நாள், வார ஏடுகளில் ஒரு குறிப்பிட்ட சாதியாரது ஆதிக்கம் இருக்கிறதென்று முன்பு எழுதியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபகமிருக்கலாம். இதன் ஆசிரியர்கள் மட்டு மல்ல, எழுத்தாளர்கள் கூட அதே 'சாதி'யைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். இதனால் அக்கிரகாரம் அம்மாமித் தமிழ் இவற்றைப் பார்க்க முடிகிறதே தவிர சாதாரண தமிழ் வீட்டையோ, தமிழ் பேச்சையோ பார்க்க முடியாமல் இருக்கிறது. அரை நூற்றாண்டு கால திராவிட இயக்கப் பணிக்குப் பிறகும் இந்த நிலைமை நீடிக்கிறது என்றால் அதையிட்டு வெட்கப்படுவதா? இல்லை துக்கப்படுவதா? என்று தெரியவில்லை.

## இந்து ஏடு

'இந்து'க்கு ஏன் இந்தத் தடுமாற்றம்? என்ற தலைப்பில் ஆசிரியர் கோவை மகேசன் தனது அரசியல் மடலில் தர்க்கரீதியாக இந்துவை விமர்சித்து இருந்தார். இந்து ஏடு அடி முதல் நுனி வரை ஐயர், ஐயங்கார், சாஸ்த்திரி, சர்மா இவர்களால் ஒரு குறிப்பிட்ட மேல் தட்டு வர்க்கத்தினருக்காக நடத்தப்படும் ஒரு பத்திரிகை. தமிழ் நாட்டில் உள்ள நாலுகோடித் தமிழ் மக்களது அரசியல் சமூக இலட்சியங்களை 'இந்து' எள்ளத்தனையும் பிரதிபலிப்பதாகச் சொல்ல முடியாது.

இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் கூட இந்த ஏடு ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கு ஆலவட்டம் பிடித்தது என்பது குறிப்பிடத்தக்கது. இதனால், மறைந்த நேரு 'இந்து'ப் பத்திரிகை ஒரு முக்காடிட்ட விதவை போன்றது என்று வர்ணித்திருக்கிறார்.

## வர்க்க நலன்

தன்னை ஒரு நடுநிலைமைப் பத்திரிகை என்று சொல்லிக்கொள்ளுகிற ஒரு நாளேடு அண்மைக் காலமாக ஆளுங்கட்சிக்கு முண்டு கொடுத்து செய்திகளை வெளியிட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

உதாரணமாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் 'மட்டக்களப்பில் நடைபெறும் சூறாவளி நிவாரணப் பணியில் அரசியலைக் கலக்கவேண்டாம்' என்று கேட்டுக்கொண்ட செய்தியை முதல் நாள் மூன்று கலம் தலைப்புடன் வெளியிட்டு விட்டு, அடுத்த நாள் மந்திரி தேவநாயகத்தின் அதே செய்தியை, எட்டு கலம் தலைப்புக் கொடுத்து பிரசுரித்திருந்தது.

இந்தப் பத்திரிகையின் இந்தப் பக்கச் சாய்வுப் போக்கு ஒரு விதத்தில் பார்க்கப் போனால் கொஞ்சமும் ஆச்சரியப்பட வேண்டியதல்ல. வர்க்க நலனே இதற்குரிய உண்மையான காரணம் என்பது சொல்லாமலேயே விளங்கும். பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் இதை ஒளிவு மறைவின்றி அண்மையில் சுட்டிக்காட்டிப் பேசியிருந்தார்.

## தமிழ் எழுத்தாளர்

'இலங்கைத் தமிழர் பற்றிய நீண்ட ஒரு கட்டுரை எழுதிய முதல் தமிழ் நாட்டு எழுத்தாளர் மணியன் தான்' என்று நான் எழுதியதற்கு வாசகர் ஒருவர் ஆட்சேபம் தெரிவித்துள்ளார். (அவரது கடிதம் 29ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.) மணியனுக்கு முன்பே மு. வ. கல்கி, பகீரதன் போன்றோர் இலங்கைத் தமிழரைப் பற்றிக் கட்டுரைகள் ஏற்கனவே எழுதியிருக்கிறார்கள் என்பது வாசகரது வாதம். வாசகர் குறிப்பிட்ட எழுத்தாளர்களது கட்டுரைகளை நானும் படித்திருக்கிறேன். ஆனபடியால் தான், இலங்கைத் தமிழரைப்பற்றி 'இப்படி நீண்ட ஒரு கட்டுரை எழுதிய ஒரு முதல் தமிழ் நாட்டு எழுத்தாளர் மணியன்' தான் என்று குறிப்பிட்டிருந்தேன். நீண்ட என்ற ஒரு வார்த்தையை நான் உபயோகிக்காவிட்டால், வாசகரது ஆட்சேபனை பொருத்தமாக இருந்திருக்கும்.

இன்னொன்றையும் கவனிக்கவேண்டும். வாசகர் குறிப்பிட்ட எழுத்தாளர்கள் எழுதிய கட்டுரைகள் கிட்டத்தட்ட கால் நூற்றாண்டுக்கு முன் எழுதப்பட்டவை. அதாவது மொழிப்பிரச்சினை, தனிநாட்டுக் கோரிக்கை தலைதூக்கு முன்பு எழுதப்பட்டவை. இப்போதுள்ள இளைய தலைமுறையினரின் நூற்றுக்கு ஐந்து விழுக்காட்டினர் தன்னும் அவற்றை வாசித்திருப்பார்களோ என்பது சந்தேகம். ஆனால் மணியன் விடயம் வேறு. அவர் தொடர்ந்து நாற்பது வாரங்களாக எழுதிய தொடர் கட்டுரையை தமிழ் நாடு உட்பட பல லட்சம் வாசகர்கள் வாசித்திருப்பார்கள். மணியன் தமிழ் ஈழக் கோரிக்கையை நேரடியாக ஆதரிக்காவிட்டாலும், அப்படி ஒருபிரச்சினை இருக்கிறதென்பதை எழுதக்கூடியஅளவுக்கு எடுத்துச் சொல்லி இருக்கிறார். இது சம்பந்தமான ஏனைய வாசகர்களது கருத்தும் வரவேற்கப்படுகிறது.

## ஸ்ரீலங்கா — சிங்களம்

சென்ற மேடையில் சிங்கள பொலிசாரைப் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு, 'வீடுகளில் நள்ளிரவில் புகுந்து சோதனை செய்வதற்கு, சட்டம் ஏதாவது இருக்கிறதா?' என்று கேட்டிருந்தேன். ஆனால் அதன் பின் வடக்கில் நடக்கும் பொலிஸ் இராணுவத் தாக்குதல்கள், கொள்ளையடிப்பு, தீவைப்பு முதலியவற்றை படிக்கும் பொழுது 'நள்ளிரவில் வீட்டுக்குள் புகுவது' பரவாயில்லைப் போல் தெரிகிறது. ஸ்ரீலங்கா பொலிஸ் இராணுவம் என்றால் அது சிங்கள பொலிஸ், இராணுவந் தான் என்பதை இந்தச் சம்பவங்கள்—தாக்குதல்கள் அச்சொட்டாக நிரூபிக்கின்றன.

நக்கீரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களைப்பற்றி இரசிகமணி

சங்க காலம், சங்கம் மருவிய காலம், காவியகாலம், புராண காலம், பிரபந்த காலம், சொற் சித்திரகாலம் எனத் தமிழ் கவிதைகளைப் பகுத்துக் கூறிய ஒரு பிரபல பண்டிதர் அவர்கள் இந்த நூற்றுண்டுக்குச் 'சமரகவிக்' காலம் என்று ஒரு அருமையான பெயரிட்டார். சென்ற இருபத்தைந்து வருடங்களின் கவிதை முயற்சிக்கு 'இமிட்டேசன் காலம்' என்றுதான் முடித்தார். பாரதியின் கவிதைத் தொகுதியையோ, பாரதிதாசன் கவிதைகளையோ பிரித்து வைத்துக்கொண்டு, 'உள்ளூடல்' ஒன்றுமின்றி ஏதோ சிலவற்றைக் கீறிவிட்டுக் கவிதா மேகங்களாகக் காட்சி அளிக்கின்றனர் எழுத்தாளர்கள். இந்தச் 'சமரகவிக் காலம்' — 'இமிட்டேசன்' காலங்களிலும் இடையிடையே சிறந்த கவிதைகளை எழுதும் எழுத்தாளர்கள் இல்லாமல் இல்லை. அப்படித் தப்பித் தவறி இந்த நூற்றுண்டில் பிறந்து விட்டவர்தான் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்.

ஒரு பஸ்வண்டி கடா முடாச் சத்தத்துடன் ஓடிக்கொண்டிருந்தது. ஐயையோ பிழை, சரியான பிழை; அவ்வளவு சனக் கும்பலையும் சுமந்துகொண்டு அதனுல் ஓட முடியுமா? முக்கி முனங்கி ஊர்ந்து கொண்டிருந்தது. அடுத்து நிற்கும் இடத்திலும் இறங்குவோர் இல்லை. ஏறுவோர்தான் நின்றனர். காற்சட்டை போட்ட கறுப்புத்துரைமாரையும் ஏற்றியாகி விட்டது. அவர்களை நிற்கவிட முடியுமா? பெரிய பூகம்பமே வந்து விடாதா? 'பஸ் கண்டக்டர்' பெரிய உத்தரவு போட்டார். 'சாதாரண சட்டை போட்ட தமிழ்ச் சட்டம்பிமார் எழும்பித் துரைமாருக்கு இடங் கொடுங்கள்' என்பதுதான் அது. இந்த பஸ்ஸில் பிரயாணம் செய்த கவிஞர் காளமேகமாகி விட்டார். அவர் வாயிலிருந்து அருமையான பாட்டு ஒன்று வழுவி விழுந்தது.

"முன்னை வடக்கால் முனைத்தநாற் சாதி போய்
பின்னை இருசாதி பிறந்ததுகாண்—அந்நியர்தம்
ஆங்கிலத்தினுல் மேல்சாதி யாயிற்றே
தாய்மொழிநற்
றேங்கி நிற்கும் கீழ்சாதியே"

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் இப் பாட்டைக் கேட்டுச் சிரிப்பதா? அழுவதா? என்று அங்கலாய்த்தார்கள் அன்பர்கள்.

புலவர்மணி சுன்னுகம் குமாரசாமிப் புலவர் அவர்களிடம் நாவலர் காவிய பாடசாலையில் முறையாகப் பாடங்கேட்டவர். அக் காலத்திலேயே பாடல்கள் இயற்றக் கூடிய சக்தி படைத்தவராக காணப்பட்டார், அருமையாகப் பாடம் சொல்லி வைத்த குமாரசாமிப் புலவரிடம் அன்பர்களுக்குரிய குருபக்தி அளவிட முடியாது. தம் குரு மீது ஆசிரியர் பாடிய பாடல் அருமையானது.

"வண்மை தமிழுக்கு வரம்பு வடமொழியின்
உண்மைத் தெளிவுக் குரையரணி—கண்மணியென்
சுன்னைக் குமார சுவாமிப் புலவனடி
சென்னிக்கு யான் செய் சிறபபு"

"பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே" என்ற பாரதி வாக்குக்குப் பிரசித்தமானது. பிறந்த பொன்னுடாகிய இலங்கையைப் பற்றி, "ஈழமணித் திருநாடு எங்கள் நாடே" என்று புலவர்மணி அவர்களால் பாடப்பட்ட பாட்டு வெகு பிரசித்தமாகிப் பாடப் புத்தகத்திலும் ஏறி விட்டது. உணர்ச்சியற்ற இலங்கை தேசிய கீதத்தை விட தமிழ் மணம் கமழும் இப் பாடல் எவ்வளவோ மேலானது என்பது பல அறிஞர்களின் அபிப்பிராயமாகும்.

ஈழநாட்டைப் பற்றிப் பாடிய புலவர் மணி தாம் பிறந்த இடமாகிய மட்டக்களப்பைப் பற்றி உணர்ச்சி பொங்க பாடியிருக்கின்ருர்.

"செஞ்சாலி வயல்வேலி ஆயிரமூர் புரக்கும்
திருவோங்கி நிறைவுடைய செல்வமெலாம் சுரக்கும்
அஞ்சாயல் மடவார்கட் கறநெறியே பெருக்கும்
அமர் விருந்தி னுபசாரம் எவர்மனமு முருக்கும்
துஞ்சாது மள்ளர்குரல் கடலொலியை மெலிக்கும்
சுவாமி விபுலானந்தர் யாழிசை நூலொலிக்கும்
........................................."

மட்டக்களப்பு என்றவுடனேயே வயலும் விருந்தும் வரும் காட்சிதான் என்னே, அடுத்து யாழ் நூல் தந்த விபுலானந்தர் காட்சியளிக்கின்ருர்.

விபுலானந்த அடிகள் மேல் பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் பத்தியை எந்த வார்த்தைகளால் அளவிட்டுரைப்பது. உயர்மிகு விபுலானந்த அடிகளார் சன்னிவாத சுரத்தினின்று மீட்சி பெற்று உடனலம் பெறுக என வாழ்த்தி "காரேறுந் திருமூதுர் தாய்தரு கட்டிய காதல் மகன்" என்று பாடிய பாடல்கள் மட்டக்களப்பு தமிழ் கலை மன்ற வெளி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யீடாக வந்து அறிஞர் வாயில் எல்லாம் முழங்கிக் கொண்டிருந்தன. விபுலானந்தர் மறைவு குறித்து எத்தனையோ புலவர்கள், வித்துவான்கள், பண்டிதர்கள் பாடினுர்கள். ஆனல் புலவர்மணியின் பாடல்கள் அவற்றில் பொன் போல மின்னிக் கொண்டிருந்தன.

இலக்கண இலக்கியப் புலமையோடு கவித்துவ ஆற்றலும், சிறந்த நாவன்மையும் பெற்றுக் கிழக்கு மாகாணத்தின் தமிழ்ச் சுடராய் விளங்கிய பெரியதம்பிப்பிள்ளை அவர்களுக்கு 1950ம் ஆண்டு மட்டக்களப்புத் தமிழ் மன்றம் "புலவர்மணி" என்ற பட்டத்தைச் சூட்டியது. 1952ம் ஆண்டு யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கம் "பண்டிதமணி" என்ற பட்டத்தை நல்கியது. அந்தச் சபையிலேதான் அன்பரவர்களின் சிறந்த நூலாகிய "பகவத் கீதை வெண்பா" அரங்கேற்றம் செய்யப்பட்டது.

பகவத்கீதை பலமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருந்தது. தமிழிலும் வசன ரூபத்தில் பலர் பெயர்த்திருந்தார்கள். ஆனல் புலவர்மணி அவர்கள் அழகிய வெண்பாக்களால் பாடியிருப்பது போற்றக் கூடிய செயல் என்பதில் ஐயமில்லை. "தியாகம்"என்பதைப் பற்றி அன்பரவர்கள் பாடுவது இது:-

"தன்னு லொருவன் தனையுயர்த்திக் கொள்கதனை
தன்னு விழிவுறுத்தல் தான் வேண்டா—ஏனெனில்
தானே தனக்கு நண்பன் கண்டா யதுவன்றித்
தானே பகையும்தனக்கு"

இந்த அருமையான நூலைப் பற்றி அவரது நண்பராகிய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் வியந்து பாராட்டிக் கூறியிருக்கின்றுர். "வாழி கல்லோயா நங்கை" என்ற அவருடைய பாடல்கள் சிலப்பதிகாரப் பாடல்களை நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன.

''கண்ணுர் கரும்பின் தேன் பாய
கமழ்ந்தே யாலைப் புகைசூழப்
பண்ணுர் பாகின் பதந் தேங்கப்
பரந்தாய் வாழி கல்லோயா
பண்ணுர் பாகின் பரந் தேங்கப்
பரந்த தெல்லாம் நின்தலைவன்
தண்ணுர் இனிய மனப் பண்பின்
சால்பே வாழி கல்லோயா''

"அலகின் புக ழாறுமுக நாவலனுங் கொடையார்
அவர்வாழும்யாழ்ப்பாணம்அனைவர்க்கும்இனிதே''

என்ற யாழ்ப்பாண நன்னுட்டு இயல்பு பற்றிய பாடலிலும் "பாசக் கட்டவிழ்த்து கருணை மலர் சிவபெருமான் கழல்மலர்க் கீழ்க் கலந்ததன்றே" என்ற மகாலிங்க சிவம் பற்றிய பாடலும், "நீடு வாழ் பொன்னையன்" என்ற பத்திராதிபர் நா. பொன்னையா அவர்கள் மீது பாடிய பிரிவுப் பாடலும் படிக்கும் தோறும் கனிவு சொட்டிக் கொண்டிருக்கின்றன.

மண்டூர் பதிகம், மீட்சிப் பத்து, கறிஸ்துவ துயிலுணர்ச்சி, குருபரதரிசனத் திருவேட்கை, பகவத்கீதை வெண்பா, வாழி கல்லோயா நங்கை, மட்டக்களப்புப் பற்றிய பாடல்கள், ஆசிய நாடுகள் ஒற்றுமை கூடுக, புதுமைக் கமக்காரன், கிருஷிக ஆத்திசூடி, என நூல்களாகவும் தனிச் செய்யுள்களாகவும் ஆயிரத்துக்கு மேல் பாடிய புலவர் மணியின் பாடல்கள் பல நூல் வடிவில் இன்னும் வரவில்லை.

ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராக இருந்து அரசினர் கல்லூரிகளில் தமிழாசிரியராக இருந்த புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை அவர்கள் கிழக்கிலங்கை பெற்ற எழுத்தாளர் பேச்சாளர்களில் முன்னணியில் நிற்பவர் என்பதில் ஐயமில்லை.

—குரும்பசிட்டி தி. குகானந்தன்

# 'கருங்காலி' ஆட்சேபம் நியாயமானதல்ல

காவலூர் ஜெகநாதன் அவர்களின் 'கருங்காலி' கதைபற்று மைலிட்டியைச் சேர்ந்த ஒரு அன்பர் குறிப்பிட்டிருந்த ஒரு கருத்து இவ்விதழில் வெளியாகியுள்ளது. இந்தக் கருத்து எனக்கு மிகவும் வியப்பை அளித்தது. அவர் குற்றச்சாட்டுக்கு, அந்தக்கதையை மிகவும் ரசித்துச் சுவைத்த ஒரு "கடற்றெழிலாளருக்குப் பரிந்து எழுதுவதுபோல" என்று எழுதியிருப்பது தவருன கண்ணேட்டம். அங்கே அவர் பரிந்தது அவர்கள் கடற்றெழிலாளர்கள் என்பதற்காக அல்ல. சமுதாயத்தின் ஒடுக்கப்பட்ட அல்லது ஏதோ ஒரு வகையில் பின் தள்ளப்பட்டவர்கள் என்பதற்காகவே, கதையின் முடிவில் அந்தோனி சொல்லும், "எங்களைப் போன்ற ஆட்கள் உணர்வு பெற்றல் உன்னை ஐயாவைப் போன்ற ஆட்கள் இப்படித்தான் ஓடவேண்டும்" என்றவசனத்திலே தெளிவாக்கப்படுகின்றது. 'தொழிலாளன்' என்ற உணர்வுடனேயே அந்தோனி அப்படிப்பேசுகிருன்.எனவே அவர் 'தாமரைக்கிழவனை'ப்பற்றி எழுதியது ஒரு சமூகத்தைக் கிண்டல் செய்வதாக ஆகாது. தாமரைக் கிழவன்கள், கடற்றெழிலாளர் களிடையே மட்டுமல்ல, எல்லாச் சமூகங்களிடையேயும் இருக்கிருர்கள். இவர்கள் இருப்பது தெளிவாக்கப்படுவதற்கு எங்களுக்கு சந்தர்ப்பங்கள் உதவி செய்கின்றன. இங்கே அந்தோனி தாமரைக் கிழவனை இனங்கண்டு கொண்டு, தாக்குகிருன். தாமரைக் கிழவனே ஒரு சமூகமாகிவிடமாட்டான், அவனும் அங்கு இருந்தாலும் கூட. ஏனென்றல், அங்கே அந்தோனிகளும் இருக்கிருர்கள். எனவே அவர் அந்தச் சமூகத்தைக் கிண்டல் செய்தார் என்ற குற்றச்சாட்டு அநீதியானது.

—விக்னேஸ்வரன், குடத்தனை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டோம் கருத்தறிந்தோம்!



பேட்டி கொடுத்தவர்
முல்லைமணி

ஈழத்தின் இலக்கிய உலகில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகப் பணிபுரிந்து சிறந்த எழுத்தாளராகவும் கவிஞராகவும் சமயத் தொண்டராகவும் விளங்கும் 'கலைஞர் திலகம்' 'முல்லைமணி' வே. சுப்பிரமணியம் அவர்களை எமது 'சுடர்' சஞ்சிகையின் சார்பில் செவ்வி காணச் சென்றபோது சுடர் இதழ் ஒன்றை மிகவும் ஆவலோடு படித்துக்கொண்டிருந்தவர் என்னைக் கண்டதும் "வாருங்கள் தம்பி" என்று அறிஞர்க்கே இயல்பான அன்புடன் வரவேற்றார். நானும் அமர்கின்றேன் அவர் தந்த நாற்காலியில். செவ்வி ஆரம்பமானது.

**கேள்வி:** எழுத்துத்துறையிலே, எத்தனை ஆண்டுகளாகப் பணியாற்றி வருகின்றீர்கள்? தாங்கள் விரும்பி எழுதும் துறைகளைப்பற்றிக் கூறுவீர்களா?

**பதில்:** சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக பணியாற்றி வருகின்றேன். முதலில் நாடகம் எழுதுவதில்தான் ஆர்வமும் அதிக ஈடுபாடும் எனக்கிருந்தது மற்றும் சிறுகதை, கவிதை, சமயம், நாவல் துறைகளிலும எழுதி வருகின்றேன்.

,= பிறந்த மண், மல்லிகை வனம் எனும் நாவல்களை எழுதியிருக்கின்றேன். ஏறக்குறைய இருபத்தெட்டு நாடகங்கள் எழுதியிருக்கிறேன். வீரகேசரி நிறுவனம்' நடாத்திய 'வெண்பா'ப் போட்டியில் முதல் பரிசு பெற்றிருக்கிறேன்.

**கேள்வி:** எழுந்தாளர் என்ற முறையில் தங்களின் படைப்புகளைப்பற்றிக் கூறமுடியுமா?

**பதில்:** குறிப்பாகச் சொன்னால் அமைப்பு, மக்களை அடையும் போக்கு, மக்கள் உணர்ச்சிகளைத் தட்டியெழுப்பும் விதம் போன்றவற்றில் யான் எழுதிய 'பண்டாரவன்னியன்' நாடக நூலைக்குறிப்பிடலாம். அத்துடன் அது எனது மனதிற்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் விதத்தில் ஈழத்தில் வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கோப்பாய், மட்டக்களப்பு பகுதிகள், கொழும்பு, கண்டி, மற்றம் தீவுப் பகுதிகள் உட்பட இலங்கையில் அநேகமான இடங்களில் மேடையேற்றப்பட்டிருக்கின்றது. காவலூர் புனித அந்தோனியார் கல்லூரிப் பழைய மாணவர்களால் நாட்டுக்கூத்தாக கொழும்பு—பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் மேடையேற்றம் பெற்றுள்ளது. அண்மையில் சோவியத் ரஷ்யப் பல்கலைக்கழகத்தில் ஈழத்து மாணவர்கள் இந்த நாடகத்தை நடித்துள்ளார்கள். பிரதேச விழிப்புணர்ச்சிக்கும் இந்நூல் முக்கியத்துவம் அளித்துள்ளது.

1964ம் ஆண்டு பண்டாரவன்னியன் கையெழுத்துப் பிரதிக்கு 'கலைக்கழகப் பரிசு' பெற்றேன்.

**கேள்வி:** அநேகமாக உங்கள் படைப்புகளுக்குப் புனை பெயரைத்தானே குறிப்பிடுவீர்கள்?

**பதில்:** இல்லை. ஆரம்பத்தில் சொந்தப் பெயரில் தான் எழுதி வந்தேன். பின்னர் புனை பெயரினைத்தான் குறிப்பிட்டு வந்துள்ளேன்.

**கேள்வி:** தங்கள் படைப்புகள் ஏற்படுத்திய தாக்கங்களைப்பற்றிக் குறிப்பிடுவீர்களா?

**பதில்:** வரலாற்றுணர்ச்சி, பிரதேச உணர்வு, இலக்கிய விழிப்புணர்ச்சி ஆகியவற்றிற்கு மக்களை சமூகரீதியில் இட்டுச் சென்றது என்ற வகையிற் கூறினால் பண்டாரவன்னியன் நூல் என்பேன். அத்துடன் இலங்கைப் பல்கலைக்கழக மாவட்டத்தில் ஆய்வுகளும், வடபிரதேசத்தில் புதைபொருள் ஆராய்ச்சிகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதன் தாக்கத்தினால் எழுதப்பட்ட 'வன்னியர்' நூலைக்குறிப்பிடலாம் அத்துடன் திரு. செ. குணசிங்கம் அவர்களின். "கள்ளியங்காட்டுச் செப்பேடுகள்" கலாநிதி சி. பத்மநாதனின் "யாழ்ப்பாண அரசு' என்பவற்றையும் குறிப்பிடலாம். இவைகளுக்கு நான் ஆரம்பித்தமையே துணைபுரிந்தன.

பிரதேச விழிப்புணர்ச்சிக்கு முக்கியத்துவமளிப்பதில் 'வன்னியூர்க்கவிராயர்' 'மணிவாணன்' திரு. வ. அ. இராசரத்தினம், 'செங்கை ஆழியான்' அ. பாலமனோகரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேட்டி கண்டவர்
நயனன்

போன்றவர்களெனலாம். பாலமனோகரனின் 'நிலக்கிளி', செங்கை ஆழியானின் 'வாடைக்காற்று', 'காட்டாறு' போன்றவை சிறந்த பகைப்புலச் சித்திரிப்பு இடம் பெற்ற நாவல்களாகும்.

இரண்டாம் வகுப்புத் தமிழ்ப் புத்தகத்தில் பண்டாரவன்னியனைப் பற்றிய கதை ஒன்றும், 8ம் வகுப்புத் தமிழ்ப் புத்தகத்தில் ப. வன்னியன் நாடகக் காட்சியொன்றும் சேர்க்கப்பட்டுள்ளன.

கேள்வி: இலக்கியங்கள் ஈழத்தில் பெற்றுள்ள வளர்ச்சிபற்றித் தங்கள் கருத்தென்ன?

பதில்: தொகையில் வளர்ச்சி ஆனால் தரத்தில் வளர்ச்சியின்மையைக் காணக்கூடியதாக இருக்கின்றது. மக்கள் பிரச்சினைகளை ஆசாபாசங்களை யாப்பமைதியுடன் அத்தோடு மக்கள் பேச்சோசையுடன் கவிதைகள் வெளிவந்தமை ஒரு புதிய திருப்பமாகும். "கவிதை ஈழத்தில் புதியரீதியில் வளர்ச்சிபெற்றுள்ளது என்பது இந்தியாவைச் சேர்ந்த திருவாளர்கள் 'சிட்டி', சோ. சிவபாதசுந்தரம் ஆகியோர் கருத்து. இந்த முறையில் நோக்கினால் மஹாகவி, நீலாவணன், முருகையன் போன்றவர்களைக் குறிப்பிடலாம். நாவல் இலக்கியத்திற்கு 'வீரகேசரி' நிறுவனம் போன்றவை வெளியீட்டிற்கு உதவி புரிந்து வருவதையும் காண்கின்றோம்.

கேள்வி: சமய விடயங்களில் தங்களுக்கு அதிக ஈடுபாடு உண்டென எண்ணுகிறேன்?

பதில்: சமயத்தில் ஈடுபாடு உண்டு. கட்டுரைகள், கவிதைகள் எழுதிவருகின்றேன். ஒட்டுசுட்டான் தான் தோன்றீஸ்வரர் பாமாலை நெடுங்கேணி வில்வையடிப் பிள்ளையார் பாமாலை, காவத்தை நீலகாமம் முத்துமாரியம்மன் திருவூஞ்சல், வற்றாப்பளைக் கண்ணகி தோத்திரப்பாமாலை ஆகிய கவிதைகளைப் பாடியிருக்கின்றேன். 'ஆணவத்தோடத்துவிதம்' உட்பட பல சமய, சைவசித்தாந்தக் கட்டுரைகளையும் எழுதியுள்ளேன்.

கேள்வி: தமிழகத்துச் சஞ்சிகைகளுக்கிருந்த இறக்குமதிக் கட்டுப்பாடு தற்போது நீக்கப்பட்டு தாராளமாக அவை இறக்குமதி செய்யப்படுவதனால் ஈழத்தின் இலக்கிய வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை ஏற்படும் என நினைக்கிறீர்களா?

பதில்: தமிழகச் சஞ்சிகைகளின் கட்டுப்பாடற்ற இறக்குமதி மட்டுந்தான் ஈழத்தின் இலக்கிய வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையென நான் கருதவில்லை. கட்டுப்பாடு இருந்த காலத்தில் ஒருவார சஞ்சிகையாவது தோன்றவில்லை. தோன்றிய சில மாத சஞ்சிகைகளும் ஜனரஞ்சகமாக அமையவில்லை. அதே வேளை நாவல வெளியீட்டுத்துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டது. காரணம் என்னவென்றால் வீரகேசரி நிறுவனத்தினர் வெளியீட்டுத்துறையில் மேற்கொண்ட முயற்சியாகும். பொதுவாக வளர்ச்சியின்மைக்கு 'பிரசுரகளம்' இன்மையே! ஒரு சஞ்சிகையை வெளியிடுவது இலாபகரமானது என முதல் படைத்தவர்களும் பத்திரிகை நிறுவனங்களும் கருதாமையும் ஒரு காரணம். சஞ்சிகைகளின் வடிவிலே தென்னகத்தின் பிரபல எழுத்தாளர்களின் நாவல்கள் மலிவு விலையில் விற்பனையாவது ஈழத்தின் புத்தக விற்பனையை வளர்ச்சியைப் பாதிக்கின்றது.

கேள்வி: எழுத்துத்துறைக்குத் தாங்கள் பிரவேசிப்பதற்கு ஏதுவாக இருந்தவைபற்றிக் குறிப்பிடுவீர்களா?

பதில்: எனக்கிருந்த இயல்பான தமிழார்வமும் வீரகேசரியின் செய்தி நிருபராகக் கடமையாற்றியமையும் அத்தோடு பிரதேசத்தை, மக்களை, அவர்களின் ஆபாசங்களை வாழ்க்கைப் பிரச்சினைகளை இலக்கியத்தின் மூலமும் வெளியிடவேண்டுமென்ற ஆவலும் எமது பிரதேச வரலாற்று நிலைகளை மக்கள் அனைவரும் அறிய வேண்டுமென்ற ஆர்வமும் எனச் சொல்லலாம்,

கேள்வி: கேள்விகளில் கடைசியாக ஒன்று 'ஈழத்தின் சுடர்' சஞ்சிகையைப்பற்றித் தங்களின் அபிப்பிராயம் என்ன?

பதில்: நவீனத்தின் போக்குடன் பாரம்பரிய இலக்கியங்களை அறிமுகப்படுத்தவும் 'சுடர்' இடம் அளிப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். 'தலையங்கங்கள்' ஆணித்தரமானவை. தரமான கலை இலக்கியச் சஞ்சிகை என நான் கருதுகின்றேன்.

செவ்வி:— 'நயனன்',
கரிபட்டமுறிப்பு.

---


கூட்டணித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தனது மேடைப் பேச்சுக்களில் அடிக்கடி பயன்படுத்தும் சொல் 'நண்பர்களே! திரு. மு. சிவசிதம்பரம், பா. உ. பயன்படுத்தும் சொல் 'அன்பர்களே'!

அனுப்பியவர்; இளங்கோ.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கட்டுப்பாடுகள்

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்

நாங்கள் இளம் பெண்கள் எங்களுக்கு உலகின் இனிமையான எல்லாமே பிடிக்கும்- ஆனல்...

கட்டுப்பாடுகள் எங்களுக்கு பிடிக்காது. எத்தகைய கட்டுப் பாடுகளையும் நாங்கள் எதிர்க்கின்ரும். பயங்கரமான பூதமாக மிதந்து திரியும் பிசாசாக உணருகின்ற அந்த கட்டுப் பாடுகளை நாங்கள் பரிபூரணமாக வெறுக்கின்ரும். வீட்டில், ரேட்டில், பஸ்ஸில் நாங்கள் படிக்கும் இடம் எங்குமே கட்டுப்பாடு.

விண்ணில் மின்னும் நட்சத்திரங்களுக்கும் பறந்து திரியும் பறவைகளுக்கும் அழகாக மலர்ந்து நிர்வாணமாக காட்சி தரும் மலர்களுக்கும் மலருக்கு மலர் தாவும் வண்டுகளுக்கும் இல்லாத கட்டுப்பாடு எங்களுக்கு ஏன்? அது தான் புரியவில்லை.

வீட்டில் நிலவும் கட்டுப் பாடுகளை நினைக்கும் போது ஆத்திரம்தான் வருகிறது.

"ஏன்டி அங்கை போனுய்"

"அடிக்கடி—ஏன் கண்ணுடி பார்க்கின்ருய்"

"நேற்றைக்கும் முழுகினுய் இன்றைக்கும் முழுக வேணுமோ"

"ஏன்டி—கேற்றடியில் நிற்கின்ருய்"

இப்படி எதற்கெடுத்தாலும் குறுக்கீடு-கட்டுப்பாடு. என்னுடைய அம்மா அம்மாவாக தெரியவில்லை. சர்வாதிகாரத்தன்மை கொண்ட அரசியாக தெரிந்தார். அம்மாவைப் போலவே அண்ணுவும் தம்பியும் விளங்கினுர்கள். நினைத்த இடத்துக்கு நினைத்த மாதிரி போக முடியாது.

"ஏன்டி எங்கே போகிருய்" என்று முகத்தில் சினம்பட அம்மா கேட்க-

"கல்யாணி வரச் சொன்னுள் அம்மா, போக வேண்டும்"

"ஏன் நாளைக்கு சந்திக்க முடியாதோ"

"இல்லையம்மா...... வந்து......"

"போடி போய் பார்க்க வேண்டிய அலுவலைப்பார். கல்யாணியைப் பார்க்கப்போகலாம்" என்று அம்மா திட்டிக் கொண்டு போவாள்.

மனம்—எரிமலையாக வெடித்து தீப்பிளம்புகள் பீறி வெளியே பாயும். அந்த தீப்பிளம்புகளுக்கிடையில் அம்மா சிக்கித்தவிப்பாள்.

படிக்கின்ற இடத்திலும் இப்படித்தான். நினைத்த நேரம் வரமுடியாது. விரும்பிய படி திருப்பி போகமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீச்சர், மாஸ்டர் மார்களின் சட்டதிட்டங்கள், கட்டுப்பாடுகள் எல்லாம் தலையைவெடிக்கச் செய்துவிடும்.

பஸ்ராண்டிலும் நாங்கள் ஆய்ஊய் என்று கத்திஅரட்டை அடிக்கும் போது தப்பித்தவறி ஒரு ரீச்சர் நின்று விட்டால் போதும் ஒழுக்கம், பண்பாடு, கட்டுப்பாடு பற்றி ரீச்சர் பிரசங்கமே வைத்து விடுவார்.

இப்படித்தான் ஒரு நாள் எல்லோரும் கும்மாளமடித்துக் கொண்டிருந்தோம், பெல்பாட்டம் அணிந்த இளைஞன் ஒருவன் அந்தப்பக்கத்தால் நடந்து போனான்.

''கிளிபோகுது கிளி'' என்று பிரியா சத்தமிட்டாள், நாங்கள் சிரித்தோம். காதில் இருந்த வளையங்கள் குலுங்கின.

அந்த இளைஞன் திரும்பிப் பார்த்தான். அவன் முகத்தில் மெல்லிய புன்முறுவல் உதிர்ந்தது.

''நீங்கள் நன்கு பழுத்த பழங்களானால நான் கிளியாகின்றேன்'' என்று அவன் கூற அவனது விழிகள் எங்கள் சிவந்த கன்னங்களிலும் பளபளக்கும் இடைகளிலும் ஊர்ந்தன.

அவனது பார்வையின் வெம்மை தாங்காது நாங்கள் நெளிந்தோம் உஷ்ணமான பெருமூச்சு எங்களிடமிருந்து பிறந்தது.

**கண்கள்**

இந்தக் கண்கள் தானே அவரை எனக்குக் காட்டி என்னை இக்காதல் துன்பத்தில் இழுத்து விட்டது! இப்போதுஅவையேதுயில் கெட்டுத் துன்பப்படுகின்றன. படட்டும். நன்றாகப் படட்டும்! தாம் செய்த பழிக்குத் தாமே நன்றாகப் பட்டழியட்டும். அதைக் காண எனக்குமகிழ்ச்சியே!

((குறள் 1176)

''உஸ்'' என்று சத்தம் எங்கள் பின்னால் இருந்து வந்தது. நாங்கள் பார்த்தோம். எங்கள் ரீச்சர் நின்று கொண்டிருந்தார்.

''இப்பிடித்தான் நீங்கள் பஸ்ராண்டில் நிற்கும் லட்சணமா? சீ... கொஞ்சம் கூட கட்டுப்பாடு இல்லாமல் நடக்கிறீர்களே. பெண்கள் என்றால் அடக்கமாக இருக்க வேணும்'' என்று அவர் தனது பிரசங்கத்தை தொடங்கினார்.

**இம்மாத பரிசுக் கதை**

நாங்கள் யாருமே எதுவுமே பேசவில்லை. ஆனால் ரீச்சரைப் பற்றி எங்களுக்கு தெரியும். வயது நாற்பதுக்கு மேல் போய் விட்டது. இன்னமும் கலியாணம் ஆகவில்லை. ஆனால் நாகரீகத்துக்கு மாத்திரம் குறைவில்லை.

இப்படி எங்குமே கட்டுப்பாடுகள் நிறைந்துவிட்டதனால் எப்படி இந்தக்கட்டுப்பாடுகளை உடைத்தெறிவது என்பது பிரச்சனையாக இருக்கின்றது.

நாங்கள் ஒவ்வொருவரும் எதற்கும் பயந்தவர்கள் அல்ல என்றும், எந்த கட்டுப்பாடுகளையும் வெறுப்பவர்கள் போலவும் துணிச்சலானவர்கள், உறுதிமிக்கவர்கள் என்றெல்லாம் ஒருவரோடு ஒருவர் கதைக்கும் போது காட்டிக் கொள்வோம். அப்படியான கதைகளின் பயனாக-

வீட்டின் கட்டுப்பாடுகளை எப்படி உடைத்தெறிவது என்பது பற்றி திட்டமிடல்லாமே. பரிபூரணமான சுதந்திரமிக்கவர்களாக எப்போது விளங்கப் போகின்றோம் என்பதுதான் பிரச்சினையாக இருக்கின்றது'

நான் கட்டுப்பாடுகளை மெல்லமெல்ல எதிர்க்கவாரம்பித்தேன். அம்மாவின் திட்டுக்களையும் அண்ணரின் பேச்சையும் பெரிதுபடுத்தாமல் எனது எண்ணப்படி நடக்கவாரம்பித்தேன். என்னைப் போலவே ஏனையவர்களும் நடந்துகொள்ளவாரம்பித்தார்கள்.

அந்த சமயத்தில்தான் எங்கள் இடத்தில் வாணி விழா நடத்துவதாக உத்தேசிக்கப்பட்டது. இரவுவரை நிகழ்ச்சிகள் நடக்கவிருந்தன.

* * *

காலையிலேயே கனகாம்பர மாலையினை தயாரித்தேன். சாம்பூ வைத்து முழுகினேன். சாரிக்கு மாட்சாக ப்ளவ்சும் ஏனையவைகளையும் தயாராக்கினேன்.

மதியபொழுதிலேயே தலைவார ஆரம்பித்தேன். நெஞ்சத்தில் உற்சாகம் பிறந்தது.

''என்னடி இன்றைக்கு'' அம்மா கேட்டாள்.

''வாணி விழா''

''எத்தனை மணிக்கு தொடங்குகிறது''

''பின்னேரம்''

''அதற்கு இப்ப—என்ன...... அவசரம்''

''இப்பவே வெளிக்கிட்டால் தான் போகலாம்...''

''யாரைக்கூட்டிக்கொண்டு போகப் போகிறாய்''

''எதற்கு...''

''துணைக்கு...''

''ஏன் ...துணை... எனக்கு போய்வரத் தெரியாதே''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னடி சொல்லுகிறாய்... இரவு எப்படி.... திரும்பி வருவாய்"

"எனக்கு வரத்தெரியும்... யாரும்துணை தேவையில்லை....

"உனக்கு என்ன மாறாட்டமே? வயது வந்த ஒரு பெம்பிளை அதுவும்—இராத்திரி தனிய எப்பிடி வருவாய்? துணைக்கு யாராவது வேண்டாமென்றால், நீ இன்றைக்கு போகக் கூடாது".

"நான்..கட்டாயம்... போக வேணும். ஆனால்— துணைக்கு யாரும் தேவையில்லை" என்று உறுதியாக சொன்னேன். யாரும் துணைக்குவந்தால்இடை நடுவில் திரும்பவேணும். எல்லாமே பிரச்சினை என்று நினைத்தேன்.

அம்மா ஆத்திரத்துடன் பார்த்தாள்.

"நீ...வர...வர ஒரு மாதிரியாகத்தான் இருக்கின்றாய்.இப்பிடி கட்டுக்கடங்காமல்இருக்கலாம் என்று நினைக்காதே" என்று அம்மா பேசத் தொடங்கினாள்.

அம்மாவுக்கும் எனக்கும் வாய்ச் சண்டைஆரம்பித்தது.

## காதலி

இந்தக்காதலியின்காதல் ஆற்றல் தீயின் வெப்புப் போல்தான் சுடுகிறது. ஆனால் இதன் ஆற்றல் மிகைப்படுகிறது. தீயானது அணுகஅணுகத்தான் அது வெப்பு மிகுதியாகிச் சுடும். அகன்று செல்லச் செல்லஅவ்வெப்புக் குறைவதற்கே வழியுண்டு. ஆனால் இவள் காதல் ஆற்றலின் தீயோ அகல அகலத்தான் வெப்பு மிகுதியாகச் சுடுகிறது! அணுகினாலோ பன்னீரும் சந்தனமும் போல் குளிர்ச்சியாயிருக்கிறது! இது என்ன வியப்பு?

(குறள் 1104)

இடையிலே அண்ணாவும் புகுந்தார். எனது பிடிவாதம் தளரவில்லை. இவர்களுக்கு நான் ஏன் விட்டுக் கொடுப்பான் என்று நினைத்தேன். அண்ணாவுக்கும் எனது பிடிவாதம் ஆத்திரத்தைக் கொடுத்தது போலும்.

"விருப்பம் போல் போய் எப்படியாவது வரட்டும்" என்று அண்ணா பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

என்னுடைய பிரண்ட்ஸ் தாங்களும் தங்கள் வீடுகளில்போராட்டங்கள் நிகழ்த்தியதாக சொன்னார்கள்.



* * *

இரவு ஒன்பது மணிக்கு விழா முடிவடைந்தது. எல்லோரும் பஸ்ராண்டுக்கு வந்தோம்.கூட்டமாக நின்றுஅந்த இருண்ட இரவில்கலகலப்பாக கதைத்தோம்; சிரித்தோம்.

வழக்கமாக ரயிலில் வந்து போகும் சிலர் பஸ்ஸுக்காக காத்திருந்தார்கள்.

"இன்றைக்கு கல்யாணி ரயில் மிஸ் பண்ணிவிட்டாள்" என்று ஒருத்தி கூறினாள்.

"ஓமப்பா கல்யாணி இன்றைக்கு ரயிலை மாத்திரம் மிஸ் பண்ணவில்லை. வழக்கமாக ஸ்ரேசன் றோட்டில் காணும் கணேசமூர்த்தியையும் மிஸ் பண்ணிவிட்டாள்" என்று கூற எல்லோரும் பெலத்தகுரலில் சிரித்தோம்.

வீதியில் போக்குவரத்து குறைவாக இருந்தது. எதிரே இருந்த கடைகளும் பூட்டப்பட்டிருந்தன. நாங்கள் பல பேர் இருந்தபடியால் அந்த இரவில் பயங்கரத்தை உணரவில்லை. உற்சாகமாக கதைத்துக் கொண்டிருந்தோம். சற்று நேரத்தில் பஸ் ஒன்று வந்தது. எங்களில் அனேகம்பேர் அந்த பஸ்ஸில் ஏறிக்கொண்டார்கள்.நானும்வேறு இரண்டு பேரும் அதில் போக முடியாது. நாங்கள் போக வேண்டிய பஸ் இன்னமும் வரவில்லை.

இப்போது பஸ்ராண்டில் நாங்கள் மூன்று பேர்தான் நின்று கொண்டிருந்தோம். கலகலப்பு குறைந்து விட்டது.

றோட்டிலும் பஸ்ராண்டிலும் சனங்கள் இல்லாத படியால் பயங்கரமான அமைதி பிறந்தது. இரவின் குளிர் காற்றினை இப்போது உணர ஆரம்பித்தோம்.

திடீர் என முன்பே இருந்த கடையின் தாழ்வாரத்தின் ஓரமாக படுத்திருந்த ஒருவன் எழுந்தான். றோட்டின் ஓரமாக காணப்பட்ட இருண்ட பகுதிகளில் இருந்து நாலைந்து பேர் வெளிப்பட்டார்கள். சுதந்திர உணர்வும் துணிவும் கொண்ட எங்கள் மனங்கள் சலனப்பட ஆரம்பித்தன.

ஒன்றுசேர்ந்த அந்த நாலைந்து பேரும் சிரிக்க ஆரம்பித்தார்கள். காரணமில்லாமல் அவர்கள் சிரிக்க எங்கள் உள்ளத்தில் நடுக்கம் ஏற்படலாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எங்கள் துணிவும், வாய்க் கொழுப்பும் எந்தப் பக்கம் போனது என்று விளங்கவில்லை.

காடையர்கள் போலிருந்த அவர்கள் கரங்களில் சிகரெட்டுகள் புகைந்து கொண்டிருந்தன. அவர்கள் நாங்கள் நின்ற இடத்தை நோக்கி வந்து மிக அண்மையில் நின்று கொண்டிருந்தார்கள். தங்களுக்குள் மெதுவாக குசுகுசுத்தார்கள்.

"ஐயோ-பாவம் பஸ்ஸைக் காணவில்லையே எப்படிபோகப் போகிறார்கள்" என்று ஒருவன் சொன்னான்.

"அதற்கு நீஏன்டா கவலைப் படுகின்றாய்" வேறு ஒருவன் கேட்டான்.

"என்ன செய்வது சலனப் பட்டமனது சலனப்படுகுது" என்று அவன் கூறஏனையவர்கள் சிரித்தார்கள்.

நாங்கள் ஒருவர் கரங்களை ஒருவர் பற்றிக் கொண்டு விழிகள் துடிக்க ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம்.

"தனிமையிலே இனிமை காணமுடியுமா" என்று ஒருவன் பாடினான்.

"உனக்காகவே வாழ்கிறேன்" என பதிலுக்கு வேறு ஒருவன் பாடினான்.

எங்கள் உடல்கள் நடுங்க ஆரம்பித்தன. குளிர் காற்று வீசிய அந்த நேரத்திலும் வியர்வை ஆறுகப்பெருக ஆரம்பித்தது. மூச்சு திணறுவது போல இருந்தது.

முதல் தடவையாக யாராவது துணைக்கு வரமாட்டார்களா? அண்ணா வரமாட்டாரா என்றெல்லாம் நினைக்க ஆரம்பித்தேன்.

விடியச் சண்டை பிடித்தேனே — துணைக்கு யாரும் தேவையில்லை என்று; பிறகு எப்படி அண்ணன் வருவார், நான் செய்தது எவ்வளவு முட்டாள்தனம் என நினைக்கும் போது கண்கள் கலங்க ஆரம்பித்தன. எல்லாத்தெய்வங்களையும் வேண்ட ஆரம்பித்தோம்.

'கடவுளே யாராவது தெரிந்தவர்களையாவது இந்தப் பக்கம் அனுப்புகடவுளே' என்று மன்றாட ஆரம்பித்தோம்.

"கார் பிடிப்போமா—நாங்கள் மூன்று பேர். அவர்களும் மூன்றுபேர்" என ஒருவன் கூற,

"நாங்களும் மூன்று பேர், அவர்களும் மூன்று பேர் மிக இனிமையாக இருக்கும்" என்றான் வேறொருவன்.

எங்களுக்கு ஓவென்று அழவேண்டும் போல்இருந்தது. ஆனாலும் பெலத்த குரலில் அழ முடியவில்லை. கூடவே தலையும் சுற்றுவது போல இருந்தது. விழிகளில் கண்ணீர் முட்டி மோத தடுமாறிக் கொண்டிருந்தபோது-

வேகமாக வந்த ஓர் கார் எங்கள் பஸ்ராண்டுக்கு முன்னால் நிற்க.

"கார் வந்துவிட்டது" என அந்த ஐந்து பேரும் அமளிப்பட சுய நினைவில்லாமல் "அண்ணா" என்று நான் கத்த காரின் முன் ஆசனத்திலிருந்து ஒருவர் விரைவாக ஓடிவந்து என்ன தங்கச்சி என்று கேட்க' ஆசையுடன் பார்த்த போது என் அண்ணா நின்று கொண்டிருந்தார் "அண்ணா" என்று பாசமுடன் அழைத்தவாறு அவர்கரங்களை பற்றிக் கொண்டேன்.

எனது அந்த செய்கை அவருக்கு ஆச்சரியத்தை கொடுத்தது. நான் இப்போது ஆனந்தக் கண்ணீர் வடிக்கலானேன், அந்தக் கண்ணீருடன் கட்டுப்பாடுகளை எதிர்க்க வேண்டும் என்ற எங்கள் போராட்ட உணர்வுகளும் சேர்ந்து வெளியேறின.

(யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தோழியின் பொங்கல் கடிதம்

## திருமலை சுந்தரா

அன்புள்ள அத்தான்,

எனது பொங்கல் வாழ்த்துக்கள். உங்களுக்கு மட்டுமல்ல...உங்களோடு இணைந்து 'தொண்டாற்றும்' தோழர்களுக்கும் எனது பொங்கல் வாழ்த்துக்கள்.

'இப்போது ஏன் அவதிப்பட்டு இந்தக் கடிதம் எழுதுகிறாய்'—என்று நீங்கள் நினைக்கலாம். அதற்குத் தான் முன்னாடி 'பொங்கல்' என்ற சாட்டை வைத்து விட்டேனே! கோபிக்க மாட்டீர்கள்.. அப்படித்தானே.

உங்கள் முந்திய கடிதத்தில் கூட 'அடிக்கடி கடிதம் எழுதாதே' என்று அடித்து எழுதி இருந்தீர்கள்; நான் மறக்கவில்லை. ஆனாலும்; எழுதவேண்டுமென்ற வேகம். அது எங்கள் கணவன்—மனைவி பிணைப்பினால் அல்ல!

*சொத்துக்கள்—சுகங்கள்
சகலதும் இழந்துவிட்டோம்.
*கண்ணீர்தான் எங்கள்
உழைப்பின் அறுவடை
*எங்களின் நிலைமாற எத்தனை
எத்தனை ஆண்டுகளோ—

என்று ஏங்கும் மட்டக்களப்பு மக்களின் துயரோடு ஒன்றி விட்டவர் நீங்கள். நானோ உங்கள் அருகில் இல்லை. எத்தனையோ மைலுக்கு அப்பால் திருக்கோணமலையில் நின்று எழுதுகின்றேன். உங்களோடு சேர்ந்து 'தொண்டர் குழாமில்' கலந்து துயருற்ற மக்களுக்கு சேவை செய்ய முடியாத நிலையில் ஏங்கி தவிக்கின்றேன்.

பெண்கள் 'தொண்டர் அணியில்' இல்லையென்பது ஒரு சாட்டாக இருந்தாலும்; என்னை பிடித்த 'முடக்கு வாதம்' உங்கள் அருகில் நான் வந்து சேர பெரிய தொரு காட்டாறாகி விட்டதே!

அத்தான்; இந்த கடிதம் உங்கள் மனைவியிடம் இருந்து வரவில்லை. 'தொண்டர் அணியில் உள்ள' தோழி ஒருத்தியிடம் இருந்து வருவதாக நினைத்தே படியுங்கள்.

'வீட்டுப் பிரச்சினைகளை' எல்லாம் கொட்ட இக்கடிதம் குப்பைக் கூடையல்ல.

அத்தான் நீங்கள் யார்? எவர்களோடு சம்பந்தப்பட்டவர்? எப்படியான விடுதலை இயக்கங்களோடு கலந்தவர்? உங்களின் இலட்சியம் என்ன? உங்களின் தியாகங்கள் எவ்வகையானவை? எல்லாமே... தெரிந்துதானே உங்களை கைப் பிடித்தேன்.

விளைவுகளை அறிந்தே—அதற்கு எதிராக போராடும் சக்தி கொண்டவளாக. என்னை நான் மாற்றிவிட்ட பின்னரும்—நீங்கள் அருகில் பொங்கல் நேரத்தில் இல்லையென்பதற்காகக் கலங்குவதென்றால்...

எனக்கு ஒரு ஆசை. நீங்கள் கட்டாயம் இக்கடிதம் கண்டதும் வரவேண்டும் என்பதே! என்ன கோபம் வருகிறதா? வேண்டாம். ஆறுதலாக படியுங்கள்.

தமிழர்களுடைய சரித்திரங்களை புரட்டிப் பாருங்கள் காலா காலத்தில் அவர்களுக்கு ஏற்பட்ட இயற்கை அழிவுகளை எண்ணிப்பாருங்கள் 'தமிழ் ஆண்ட' நாடுகளை அழித்தது தானே இந்த இயற்கை. 'கடல் கோள்' என்ற பொல்லாத அரக்கனின் மகன் சூறாவளி. அவன் மகள் 'புயல்'. இவை தானே தொடர்ந்தும் 'வெள்ளம்' என்ற தங்களின் வழித்தோன்றலால் பயமுறுத்தி வருகின்றன.

அத்தான்;

சூறாவளியால் கூரைகள் பறந்தாலும், சூரியன் மாறும் திசைக்கு ஏற்ப மக்கள் நிழல்களை ஏற்படுத்திக் கொள்கின்றனர். அப்படி ஏற்படுத்தினாலும் மழை; வெள்ளம் என்ற அபாய அறிவிப்புகள் தொடர்ந்து அவர்களை சாகடித்து வருகின்றனவே. அந்த மக்களின் கண்ணீரில் கரைந்தே 'என் ஆசையொன்றை' எழுத நினைக்கின்றேன்.

எங்களின் 'திருக்கோணமலை மாவட்டம்' எப்படி மட்டக்களப்புக்கு உதவியது என்பது உங்களுக்குத் தெரியும். ஆனாலும் சிலதை ஞாபகத்துக்காக எழுதுகின்றேன். ஏனென்றால் நீங்கள் செய்த 'சுயநலமற்ற தொண்டுகள்' உங்களுக்கு தெரியாது. மற்றவர் கூறித்தான் நீங்கள் தெரிந்து கொள்வீர்கள் என்பது 'ஒன்பது மாத'- எங்கள் 'திருமண வாழ்க்கையில்' நான் தெரிந்து கொண்ட பாடங்கள். ஆதலால் எழுதுகின்றேன்.

'புயல் காலை'—விடிந்து விட்டது. சோகமான செய்தியை நீங்கள் தான் சொன்னீர்கள். "தமிழினி மட்டக்களப்பு.

### பத்துப்பாட்டு

திருமுருகாற்றுப்படை,
பொருநராற்றுப்படை,
பெரும் நாற்றுப்படை,
சிறும் பாநாற்றுப்படை,
முல்லைப் பாட்டு, மதுரைக்
காஞ்சி, நெடுநல் வாடை,
குறிஞ்சிப்பாட்டு, பட்டி
னப்பாலைமலைபடுகடாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடி மேல் அடி

**தாமரைத்தீவான்**

செயற்கை அரசுகளின் செயல்தான் எதிரிஎன்றால்
இயற்கையுமா எங்கட் கினிஎதிரி?—புயற்பேயாய்
வந்தேதுயர் கொண்ட வாழ்வைப் பறித்ததடா!
அந்தோ அடிமேல் அடி!

வயலும் வளர்தெங்கும் வாழைபலா மாவும்
அயலின் செயற்கை அழகெல்லாம்—புயலாலே
தலைகீழ் தரைமட்டம்! சாகாது செத்தோரின்
விலையென்ன வலுவென்ன வீண்!

மட்டக்களப் பென்னும் மாநகரம் உண்மையிலே
'மட்ட' களப்பாக மாறியதே!—கெட்டபுயல்
இப்படியும் செய்யுமென எண்ணியிருந்தோமா?
எப்படித்தான் வாழ்வோம் இனி—?

மாடும் மரந்தடியும் மானிடரின் உயிரில்லாக்
கூடும் பொருளும் குடிபோன—வீடுமெனப்
பார்க்கு மிடமெல்லாம் பரிதாபக் காட்சியெனில்
யார்க்குத்துணை செய்வோம் யாம்?

சூறாவளியே! சுழலும் பெரும் புயலே!
சீறாதிருந்தே நீ சீறியதேன்?—மாறாத
வடுவினையேன் தந்திட்டாய்? வந்துபார் நீசெய்த
கொடுமைகளை யாவரையும் கொல்!

பெருங் காற்றென வந்தாய்!
பெருவெள்ள மானாய் பிறகுந்தான்!—உருவாக்கித்
தரவோ முடியாது! சரிபோதும் இனிஇங்கு
வரவேண்டாம் நீ சென்று வா!

காற்றே! உயிர்மூச்சே! கணக்காய் உலவாமல்
கூற்றாகினாயே விசைகூட்டி!—ஆற்றலினைக்
காட்டவோ மட்டக் களப்பைத் தெரிந்திட்டாய்?
தீட்டுவதார் உந்தன் செயல்?

புயலென்று சொன்னாலே போதும் புரியாத
பயமன்றோ நெஞ்சத்தில் பாய்கிறது!--அயல்நாட்டில்
வீசியது கேட்டே விசனித்தோம்! நேரிலே
பேசுகிறோம் சந்தித்தபின்!

அழிந்து விட்டதாம். வாகனப் போக்கு வரத்தே இல்லையாம். நான் உடனே போகவேண்டும்" என்று...

'அங்கு ஏன் போகப்போகிறீர்கள்?' நான் அன்று தெரியாத்தனமாக கேட்ட போது பாய்ந்து விழுந்தீர்களே—

'நானென்ன விழுங்கவா போகிறேன்? உடனேயே இங்கு ஒரு ஒழுங்கு செய்ய வேண்டும். மக்களிடம் இருந்து நிவாரணப் பொருட்களை சேர்க்க வேண்டும். அதை எப்படியாவது மட்டக்களப்பு மக்களிடம் கொண்டுபோய்க்கொடுக்க வேண்டும். அதற்குப்பிறகுதான் உனது சோறு...'

அத்தான் உங்கள் முழுமையான உருவத்தோடு என்னையும் இணைத்துப் பார்த்தேன்... என்னை நான் 'தமிழினி' என்று கூறிக் கொள்ளவும் வெட்கமாக இருக்கிறது.

முன்னர் நான் எழுதிய இருகடிதங்களில் இதுகளை எல்லாம் எழுதவில்லை. இப்போது எழுதுகின்றேன். காரணத்தோடுதான்.

'தந்தை செல்வா' அவர்களுக்கு சிவன் கோவிலடியில் கட்டப்பட்டிருக்கிறதே நினைவு தூபி. அதன் முன்பாக உள்ள எங்கள் வீட்டு சன்னல் வழியாக பார்க்கின்றேன்.

நீங்கள் 'கனகசிங்கம்' அண்ணர் வீட்டுக்கு முன்பாக நிற்கிறீர்கள்... 'ரெக்டர்' ஒன்றும் 'நிவாரணப் பொருட்களோடு' மட்டக்களப்புக்கு பயணப்படக் காத்திருக்கின்றது. அப்போது-

எனது அண்ணன் உங்களிடம் வருகின்றார்.

'நானும் ஒரு மூட்டை மாவு தாரன். சின்னம்மா வீட்டை கொடுக்கிறியா?'— எனது அண்ணன் உங்களிடம் கேட்டு விட்டு 'மார்க்கண்டு கடையில்'மாவு மூடை வேண்டுவிக்க நகருகின்றார், அப்போது நீங்கள் சொன்னீர்களே...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'சுடர்' சந்தா விபரம்

ஆறு திங்கள் — 6-00
ஒரு ஆண்டு — 12-00
இரு ஆண்டுகள் — 24-00
(தபாற்செலவு உட்பட)

சுடரின் சந்தாதாரர்களாக விரும்புவோர் அதற்கான தொகையை காசுக்கட்டளை அல்லது தபாற் கட்டளை மூலம் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பி பதிவு செய்து கொள்ளுங்கள்.

நிர்வாகி,
194 ஏ. பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.

ஒவ்வொரு மாதமும் 'சுடர்' வாசகர் கரங்களில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும்!

---

'நீங்க கோவிக்கக் கூடாது. நாங்கள் எங்கள் உறவுகளைப் பார்த்தால் இஞ்ச இருக்கின்ற இவர்களின் சொந்தங்களையும் எண்ணிப் பார்க்க வேண்டி வரும். நாங்கள் செய்கின்ற காரியம் ஒரு பொதுவானது. மட்டக்களப்பு மக்களுக்கே என்பதுதான். இதுக்குள குடும்ப உறவுகளை புதிப்பிக்கக்கூடாது. அப்படி இஞ்ச இருக்கிற வேறு யாருக்காவது நினைவிருந்தால் தயவு செய்து வேற வாகனத்தில் வசதியாக கொண்டு போய் கொடுக்கலாம். அதற்கு நாம் தடை போட மாட்டோம். ரெக்டரில் ஏற்றிய 'நிவாரணப் பொருட்களில்' குடும்ப உறவுகளுக்கென்ற எதுவித கலப்புகள் இருக்கவே கூடாது'.

நீங்கள் சொல்லி விட்டீர்கள். என் அண்ணர் என்னோடு காய்ந்த காச்சல் எனக்கல்லோ தெரியும்.

'எடியே உனக்கு வாய்த்தவன் தாண்டி வந்திருக்கான். உனது வார்ப்புதான். எங்களுக்கு எங்கடி மட்டக்களப்பில சொந்தக்காரங்க? இவன்ர சின்னம்மாவும் அதுகளின் பிள்ளைகள் தானே இருக்கினம். இவனுக்காகத்தானே மாவு ஒரு மூடை போடப்போனேன். இது என்னடா வென்றால்...... அவர் பெரிய காரியம் செய்யிறார்... நான் சின்னவளாகி விட்டேன். கெட்டழிந்து போறதுகளை எப்படி சொல்லித் திருத்துவது?'

அண்ணன் உங்கள் மேல் பட்ட கோபம் எனக்கு உங்கள் மேல்... அதை எப்படி கடிதத்தில் எழுதுவது?

நான் நினைத்த கணவன், என் நினைவுகளை எல்லாம் வென்றெடுத்த நீங்கள் என்பதில்... என் உடலெல்லாம்...

அத்தான்; இன்னும் நீங்கள் உங்கள் சின்னம்மா வீட்டுக்கு போகவில்லை யென்று அவையளிடம் இருந்து கடிதம் வந்தது. ஆரையம்பதியில் உங்களை நடுவீதியில் கண்டதாகவும் எழுதி இருந்தார்கள். உங்களுடன் பேசவே அவர்களுக்கு மனம் வரவில்லையாம். 'சொந்த உறவுகள்' என்றில்லாது பொதுவான வேலைத்திட்டத்தில் உங்களை நீங்கள் அமர்த்திக் கொண்டது....

'ஒரு யோசனை' — என்று விட்டு கடிதத்தை நீட்டி விட்டேன்.

நீளமான கடிதம் வாசிக்க உங்களுக்கு சிரமம் என்பதும் எனக்குத் தெரியும்.

அத்தான்;

இம்முறை பொங்கலுக்கு போடும் அரிசியை சேர்த்து நாளாந்த பொங்கலுக்கே அவதிப்படும் 'இயற்கையின் சீறலால்' அவதிப்படும் மக்களுக்கு அனுப்பி விட்டால் என்ன? ஒரு பிடி... ஒரு மலை... இந்த காரியத்துக்காகவே உங்களை உடன் அழைக்கின்றேன். உங்களின் அனுமதியில்லாமலேயே நான் இந்தப் பணியில் இறங்கி விட்டேன்.

அத்தான்;

உடனே வாருங்கள். எங்கள் உடன் பிறப்புகளின் சோகக் கண்ணீரில் எங்களுக்கேன் பொங்கல்? வீடு-வாசல் சுற்றம்-உறவுகள்-தொழில் அனைத்துமே மறந்து தொண்டாற்றும் உங்களைப் போன்ற தோழர்களுக்கு இல்லாத பொங்கல் எங்களுக்கேன்?

அத்தான்...

இயற்கையின் சீறலுக்கும்... இனவெறியரின் இனஒதுக்கலுக்கும்... தினமும் போராடும்... மக்களின் உன்னதமான 'தமிழ் பொங்கலை' அடுத்த 80ல் அனுபவிப்போம். அதுவரை...

ஒரு தோழியின் பொங்கல் வாழ்த்துக்கள்.

அன்புடன்
உங்களின் அன்புத் தோழி
தமிழினி.

---

**பசிவந்திடப் பறக்கும் பத்து**

மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடமை, தானம், தவம், முயற்சி, தாளாமை, காதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவன் ஒரு பைத்தியம்





குமார்

பாதையை மறைத்த வண்ணம் இரு கரங்களையும் குறுக்கே நீட்டியவாறு நடுத் தெருவில் ஓடிவந்து நிற்கின்றான் அவன்.

அடர்த்தியாக கரு கரு வென வளர்ந்திருந்த அவனது நீண்ட மயிர் வாரி விடப் படாததால் மிகப் பயங்கர மான தோற்றத்தை அவனுக்கு கொடுத்திருந்தது. கிழிந்து நார் நாராகத் தொங்கும் 'சேட்'டும், தொடர்ந்து அழுக் காவதற்கு இடமேயின்றி அழுக்கான நீண்ட காற்சட்டை யும் அவன் ஒரு பைத்தியக் காரன் என்பதை மேலும் உறு திப்படுத்த போதுமானதாக இருந்தன. அவன் இன்று நேற்றல்ல கடந்த ஒருவருடத் திற்கு மேலாக தெருவில் போகும் கார்களையெல்லாம் மறிப்பதும், யாரும் புதியவர் கள் ஏனென்று புரியாது காரை நிறுத்தினால் 'என் சுகந்தி இருக் கின்றாளா' என்று காருக்குள் தேடுவதும் அவனுக்கு வழக்க மானதொன்றாகி விட்டது.

"ட்றைவர்", அவனருகில் காரை நிறுத்து என்ன விடய மென்று கேட்போம். ஏதாவது ஆபத்தாக இருக்கலாம்" என்று கூறிய வண்ணம் பின்னால் அமர்ந்திருந்த சேகர் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"வேண்டாம் 'ட்றைவர்', காரை நிறுத்தாமல் விரை வாகச் செலுத்து. அவன் ஒரு பைத்தியம்." சேகரின் அருகில் அமர்ந்திருந்த சுகந்தி பரபரப் புடன் கூறினாள். அவள் கூறிய கடைசி வார்த்தையை கேட்ட தும் பின்னால் பாய்ந்து அவளை கடித்து குதறவேண்டும் போல் என் உள்ளம் துடித்தது. குமுறும் உள்ளத்துடன் என் முன் உள்ள கண்ணாடியால் பின்னால் பார்க்கின்றேன். அவள் முகத்தில் முத்து முத் தாக வியர்வைத் துளிகள் மொய்த்திருந்தன.

அவளின் பரபரப்பைக் கண்ட சேகர் "உனக்கு பைத் தியக்காரர்களைக் கண்டால் இவ்வளவு பயமா சுகந்தி?" என்றவாறு அவளைத் தன் மடி மீது இழுத்து அணைத்துக் கொண்டான்.

அவளின் பரபரப்பின் உண்மையான காரணத்தை அறிந்து வைத்திருக்கும் நான், அந்தப் பைத்தியத்துக்காக அனுதாபப்பட்டவாறு அவனை விலத்திய வண்ணம் காரை வேகமாக செலுத்தினேன்.

அவன் காரின் பின்னால் அலறியபடி தொடர்ந்து ஓடி வருவது கண்ணாடியினூடாக தெரிந்தது. அந்தோ! பரி தாபம். அவன் கால் தடுக்கி தெருவில் விழுந்து உருளுகின் றான்.

என் கண்களில் நீர் பனிக்க என் சிந்தனைகள் பின்னோக்கி பாய்கின்றன.

அப்பொழுது சுகந்தி பாட சாலையில் படித்துக் கொண்டி ருந்தாள். நான் தான் அப்போ தும் அவர்கள் வீட்டுக் கார் 'ட்றைவர்'. அவளை காரில் பாட சாலைக்கு அழைத்துச் செல்வ தும், திரும்பவும் ஏற்றிவருவ தும் என் வேலை தான்.

மொட்டு மலர்ந்த பருவ மது. றோஜாப் பூவைப்போல் சுகந்தி அழகாக மலர்ந்திருந் தாள். இனம் புரியாத உணர்வு கள்... இன்பமூட்டும் நினைவு கள்... உடலிலும் உள்ளத்தி லும் தாளம் போட ஆரம்பித் திருந்த வேளை. பருவத்தின் இன்ப ராகங்களை இசைத்து சுகம்காணத்துணையின்றி அவள் இதயவீணை ஏங்கித் தவித்தது. பெருக்கெடுத்தோடும் இன்ப ஊற்றுகள் சங்கமமாவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந்தியைத்தேடி ஓடிக் கொண்டிருந்தன.

பருவத்தின் இன்ப வேதனைகளை சுமந்து நிற்கும் அவனுக்கு பாபு அருமருந்தானான். அவனது இதயத்தை தன் பால் கவர்ந்து தனதாக்கிக் கொண்டாள் சுகந்தி.

பாபு! கம்பீரமான தோற்றம். களைசொட்டும் முகம். அங்கு பெண்மையின் சாயல் கவர்ந்து கவர்ச்சியூட்டியது. நெற்றியில் புரண்டு விளையாடும் கேசங்கள். அவற்றை அவன் அலட்சியமாக ஒதுக்கி விடும் லாவகம். அவள் உள்ளத்து காதல் சாம்ராஜ்யத்தில் அவன் ஒரு இளவரசனானான்.

சுகந்தியை பாடசாலைக்கு அழைத்துச் செல்லும் போதெல்லாம் தெய்வ தரிசனத்துக்காக காத்து நிற்பது போல் அவளின் தரிசனத்துக்காக அந்தத் தெருவின் திருப்பத்தில் காத்து நிற்பான் பாபு. கார் அவனைக் கடந்து செல்லும் போது இருவர் பார்வைகளும் மோதிக்கொள்ளும் 'அண்ணலும் நோக்கினன். அவளும் நோக்கினள்' என நான் மனதுக்குள் எண்ணி சிரித்துக்கொண்டே காரைச் செலுத்துவேன்.

பார்வைகளின் பரிமாறல் காலையும் மாலையும் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

எத்தனை நாட்களுக்குத்தான் அவர்கள் கண்களால் பேசி தங்கள் ஏக்கங்களை போக்கிக் கொள்வது!

நாளடைவில் அவர்கள் காதலில் ஒரு முன்னேற்றம். வழமை போல அன்று சுகந்தியை சுமந்த வண்ணம் கார் சென்று கொண்டிருக்கின்றது. பாபுவைக் கடக்கும் போது காரிலிருந்து காகிதமொன்று காற்றில் பறந்து சென்று அவனருகில் விழுவதையும், பாபு அதை அவசரமாக எடுத்துக் கொள்வதையும் நான் கண்டு கொண்டேன்.

“தங்கச்சி, ஏதோ காகிதமொன்று வெளியில் தவறி

# நாம் எங்கு போகின்றோம்

**—கதிர்-தர்மபதி**

நாம் எங்கு போகின்றோம் தம்பி—நல்ல
நாளுண்டெமக்கென நம்பி

இரத்தக்கறை படிந்து—எங்கும்
இருண்டு கிடக்கிறது—தமிழன்
செத்துக்கிடந்த இடம்—இரத்தச்
சேற்றில் மிதந்தவிடம்—தமிழ்ச்
சொத்துக்கள் எத்தனையோ—இன்று
சொந்தங் கொண்டாடுமந்த
பித்தர்கள் எம்மவர்க்கு—நல்ல
பிள்ளைகள் ஆவாரோ?

காட்டினுள் ஓடிவந்த—தமிழ்
கன்னியர் கற்பிழந்தார்—அன்று
தீட்டிய கத்தியுடன்—செய்த
தீமைகள் எத்தனையோ...தம்பி
பூட்டிய வீடுடைத்தான்—அதில்
புகுந்து கொள்ளையடித்தான்—தீ
மூட்டினன் எம்மவர்க்கு—அந்த
மூடர் மீது நம்பிக்கைகொண்டு.

அகிம்சையில் வெற்றியேபெற்றார்—காந்தி
அண்டைய இந்திய நாட்டில்
அகிம்சையிலே பெருஞ்சாந்தி—என்றார்
அன்புடை ஈழத்துக்காந்தி—எங்கும்
புகுந்தபின்னே விஷப்பாம்பு—கொன்றால்
புண்ணியந் தானடா தம்பி
தகுந்த நல்லதோர்வேளை—வரும்
தாமதிப்போம் சில நாளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்து விட்டது போலிருக்கின்றது" நான் ஒன்றும் அறியாதவன் போல் சுகந்தியிடம் கூறியபடி காரின் வேகத்தைக் குறைக்கின்றேன்.

"அது ஒன்றும் இல்லை. நீ உன் பாட்டுக்கு காரை செலுத்து" அவள் தன் தடுமாற்றத்தை மறைக்க குரலில் கடுமையைக் காட்டினாள்.

மறுநாளும் கார் போய்க் கொண்டிருந்தது. ஆனால் அந்த குறிப்பிட்ட இடத்தில் பாபுவைக் காணவில்லை. நான் ஆச்சரியமுற்ற அதே சமயம் அவன் காரின் பின்னால் சைக்கிளொன்றில் வருவது தெரிந்தது. அவன் காரை விலத்தியபடி முன்னே செல்வதும், வேகத்தைக் குறைத்து பின்னே வருவதும். சில சமயம் காரின் அருகாக வருவதுமாக இருந்தான். காரின் பின்னால் அமர்ந்திருந்த சுகந்தி மலர்ந்த புன்னகையுடன் அவனை அடிக்கொரு தரம் திரும்பிப் பார்ப்பதும், முகம் சிவக்க தலையைக் குனிந்து கொள்வதுமாக சுழன்று கொண்டிருந்தாள்.

தானும் போகாமல் என்னையும் போக விடாமல் முன்னும் பின்னுமாக பாபு வந்து கொண்டிருப்பது கார் ஓட்டுவதற்கு பெரும் இடையூறாக இருந்தது. அவனது தொந்தரவு பொறுக்க முடியாமல் சலிப்புடன் காரை நிறுத்திவிட்டு, "என்ன தம்பி, நீ போக வேண்டும். அல்லது என்னைப் போகவிட வேண்டும். நீ இரண்டையும் செய்யாமல் இருந்தால் எப்படி"? அவனிடம் சற்று கடுமையாகவே கேட்டேன் நான்.

அவனது முகத்தில் வழிந்த அசடு சுகந்திக்கு ஆத்திரத்தை உண்டாக்கியிருக்க வேண்டும். "ட்றைவர், மற்றவர்களுடன் என்ன கதை உனக்கு வேண்டிக் கிடக்கின்றது" — அவள் கோபமாக என் மீது சீறினாள். நான் முணு முணுத்துக் கொண்டே காரைச் செலுத்தினேன்.

அவர்கள் காதல் மிக வேகமாக வளர்ந்து கொண்டிருந்



தது. இடையூறாக இருந்த என்னையும் அவர்கள் தங்கள் பக்கத்துக்கு இழுத்துக் கொண்டார்கள். சில சமயம் அவர்கள் காதலுக்கு நானும் துணையாக இருக்கவேண்டியிருந்தது. அதற்காக எனக்குக் கிடைக்கும் சலுகைகளோ ஏராளம்.

தோழிகளின் வீட்டுக்குப் போகிறேன், தோழிகளோடு போகிறேன், என்று வீட்டில் கூறிவிட்டு பாபுவுடன் கடற்கரைக்கும், படமாளிகைகளுக்கும், பூங்காக்களுக்கும் அவள் செல்லுவதற்கு நானும் துணையாக இருந்தேன்.

எனது செய்கைகள் சுகந்தியின் பெற்றோர்களுக்கு செய்யும் துரோகமாகவும், பெரும் பாவமாகவும் அடிக்கொருதரம் என் மனதை உறுத்தும். அவர்களிடம் கூறி அவளை கண்டித்து வைக்க வேண்டுமென என் மனம் குறு குறுத்தாலும் கூட அந்த மனம், ஒன்றுபட்டு விட்ட அவர்கள் காதலுக்கு கல்லறை கட்டுவதற்கு நான் காரணமாக இருப்பதா என்று எண்ணிய பொழுது அது எல்லாவற்றையும் விட மிகப் பெரிய பாவமாக காட்சியளித்தது.

காலம் தன் எண்ணப்படி வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. பாபுவும் வேலை பெற்று வேறு இடத்துக்கு சென்று விட்டான். சுகந்தியின் பாடசாலை வாழ்க்கையும் முற்றுப் பெற்று விட்டது.

ஆனால், அவர்கள் காதல் வளர்ந்து கொண்டேயிருந்தது. என் உதவியுடன் தங்கள் காதலுக்கு கடிதங்கள் மூலம் உரமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

காதலை எத்தனை நாட்களுக்குத் தான் மறைத்து வைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மேடை' நக்கீரனுக்கு ஒரு பகிரங்க மடல்!

## இலங்கைப் பயணக் கட்டுரை

'சுடர்' (கார்த்திகை 78) இதழிலே 'மேடை' பகுதியில், "தவறுகள் இருந்தாலும் இலங்கைத் தமிழர் பற்றி இப்படி நீண்ட ஒரு கட்டுரை எழுதிய முதல் தமிழ் நாட்டு எழுத்தாளர் மணியன் தான்" எனக் குறிப்பிட்டிருந்தீர். இது தவருனதாகும். மணியனுக்கு முன்பே, தமிழகத்தின் புகழ்பெற்ற அறிஞர்களான திரு. வி. க., கோவைகிழார் சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், டாக்டர் மு. வரதராசன், பேராசிரியர் கல்கி, 'பகீரதன்' போன்ரேர் விரிவாக இலங்கைப் பயணக் கட்டுரை எழுதியுள்ளனர். அதுவும், மணியன் எழுதியது போல் தனது பத்திரிகைக்கான வியாபாரத்தையே பிரதான நோக்காகக் கொண்டு தமிழர்களைப் பற்றித் தப்புத் தவருக எழுதாமல், கண்டனுபவித்தவற்றை உள்ளது உள்ளபடியே நேர்மையாக இப்பேரறிஞர்கள் எழுதியுள்ளனர்.

திரு. வி. க. 'இலங்கைச் செலவு' எனும் தலைப்பில் தனது பயணக்கட்டுரையை எழுதியுள்ளார். இராமச்சந்திரன் செட்டியார், 'கடலின் கண்முத்து' என்ற நூலைப் படைத்துள்ளார். பேராசிரியர் கல்கி அவர்கள், 'இலங்கையில் ஒரு வாரம்' எனும் தலைப்பிலே ஓர் பயண நூலை நகைச்சுவை கலந்து தந்துள்ளார். டாக்டர் மு. வ. அவர்கள் 'யான் கண்ட இலங்கை' எனுந் தலைப்பில் 1950ம் ஆண்டு, ஓர் இனிமையான பயணக்கடித இலக்கியத்தை தமிழுலகிற்கு வழங்கினுர். பகீரதன் அவர்கள், "ஈழநாட்டுப் பிரயாணத்தை" 'கல்கி'யில் நீண்ட தொடராக சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னரே எழுதி வழங்கியுள்ளார்.

## "தலைப்பாக்கட்டு தமிழர் தலைவர்"

கொழும்பில் கறுவாக்காட்டில் வாழும் சாய்மனைக்கதிரை வாழ் 'அறிக்கை' அரசியலறிஞர்களின் தலைவரான முன்னைநாள் நீதியரசர் வீ. மாணிக்கவாசகர் பற்றியும் கடந்த 'சுடர்' இதழில் குறிப்பிட்டிருந்தீர்கள். நக்கீரனின் ஊக்கம் சரியாகவே போய்விட்டது! யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் வேந்தராக (Chancellor) இவர் அதியுத்தம ஜனுதிபதியால் நியமனம் பெற்றுள்ளார். மற்றைய பல்கலைக் கழகங்களுக்கு பெரும்பாலும் ஓய்வுபெற்ற பேராசிரியர்கள் அல்லது விஞ்ஞானிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். உ-ம்: பேராசிரியர் டீ. ஏ. றணசிங்க (கொழும்பு) பேராசிரியர், ஈ. டபிள்யூ. அதிகாரம் (நுகேகொடை), பேராசிரியர், டீ. ஈ. ஹெட்டியாராச்சி (களனி), ஆர்தர் கிளார்க் (கட்டுப்பெத்தை) ஆனல், யாழ்ப்பாணத்துக்கு மட்டும் தலைப்பாக்கட்டு தமிழரை நியமித்துள்ளனர். இப்பதவிக்கு மிகவும் பொருத்தமானவர் ஓய்வுபெற்ற பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் என்பதே எம் கருத்தாகும். இவ்வறிஞர், பல்லாண்டுகள் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் போதனுசிரியராயிருந்து சர்வதேச புகழ்பெற்றவர் என்பது யாவரும் அறிந்ததே. இப்படியிருக்க இவருக்குப் பதிலாக; "ஆமாம்—அறிக்கை சாமி"யை தம்மிஷ்டப்படி அரசு நியமித்துள்ளது.

—ச. ஸ்ரீகாந்தா

---

முடியும்.? ஒரு நாள் அவர்கள் காதல் விவகாரமும் அம்பலத்துக்கு வந்து விட்டது.

சாந்தியின் வீட்டில் பெரிய அமர்க்களம். நடக்கக் கூடாத தொன்று நடந்து விட்டது போல் எல்லோர் முகத்திலும் கலவரம்.

பின்னரும் பொறுத்திருக்க அவர்களுக்கென்ன பைத்தியமா! தங்கள் பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடி நாலாபக்கமும் பறந்தார்கள். பணம் கொட்டிக் கிடக்கும் போது மாப்பிள்ளைக்கா பஞ்சம்!

நயமாகவும், பயமாகவும் சுகந்திக்கு இடித்துக் கூறினுர்கள். அவளிடம் கெஞ்சினுர்கள், கொஞ்சினுர்கள், உருகினுர்கள். வழக்கம் போல் பாசத்துக்கும், காதலுக்கும் நடந்த போராட்டத்தில் பாசமே வெற்றிக்கொடி நாட்டியது.

எல்லாமே அசுரகதி. திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றது. எல்லாம் முடிந்து மூன்று நாட்களாகி விட்டன. சாந்தி கூட முற்றும் மாறி கலகலப்பாக காணப்பட்டது எனக்கு அதிசயமாகவும், ஏன் கசப்பாகவும் கூட மனத்தை அரித்தது.

நான்காம் நாளே அவர்கள் தேனிலவுப் பயணத்தை ஆரம்பித்து விட்டார்கள். அவர்களை புகையிரத நிலையத்துக்கு நானே அழைத்துச் செல்கிறேன்.

என் கார் போய்க் கொண்டிருந்தது. அதோ அந்த இடத்தில் யார் நிற்பது? பாபுவா? என்மனம் திக்கென்றது. சாந்தியின் திருமணத்தை அறிந்து வந்து விட்டான் போலும். சுகந்தியை கண்ணுடியூடாக பார்க்கின்றேன். அவளும் அவனைக் கண்டு விட்டாள் போலும். அவள் முகம் களை இழந்து வெளிறிப்போய்க் கிடந்தது.

பாபு ஓடி வந்து குறுக்கே நிற்கின்ருன். நிலைமையை நன்ருக உணர்ந்து கொண்ட நான் மனத்தை கல்லாக்கி மனச்சாட்சியை கொன்று அவனை விலத்திய வண்ணம் காரை வேகமாக செலுத்தினேன். அவன் ஏதோ பெரிதாகப் புலம்பியபடி பின்னுல் ஓடி வருவது தெரிந்தது.

என் சிந்தனைகள் கலைகின்றன. புகையிரத நிலையத்தில் காரை நிறுத்துகிறேன். சுகந்தி குழந்தையை சேகரிடம் கொடுத்து விட்டு காரிலிருந்து இறங்குகின்ருள். அவள் இறங்குவதற்கு அவன் அக்கறையுடன் உதவி புரிகிருன்.

'அவன் ஒரு பைத்தியம்' என்று சுகந்தி கூறிய அந்தப் பைத்தியக்காரன் பாபுவுக்காக என் உள்ளம் ஊமையாக அழுது கொண்டேயிருந்தது. விழிகளில் துளிர்த்த கண்ணீர்த் துளிகளை யாருக்கும் தெரியாமல் துடைத்துக் கொள்கிறேன். (யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் வட்டம்

செல்வன் ம. கிருபைராசா, 225, தும்பளை வீதி, பருத்தி நகர்.

பொழுதுபோக்கு: கிரிக்கட், உதைபந்தாட்டம் விளையாடுதல், வானொலி கேட்டல், சமூகசேவைகளில் ஈடுபடல்.

ஏ. எஸ். மகாதேவன், இம்புள்பிட்டி L. D., நாவலப்பிட்டி.

பொழுதுபோக்கு: சினிமா பார்த்தல், வானொலி கேட்டல் நண்பர் அறிமுகம், கதைப் புத்தகம் வாசித்தல்.

ஏ. வி. முருகதாசன், புகையிரதப்பகுதி முகாமி,பாலம்கள் திணைக்களம், இலங்கைப் புகையிரதப் பகுதி, கொழும்பு—9.

பொழுதுபோக்கு: சுதந்திரன், சுடர், சரித்திர நாவல்கள், புத்தகங்கள் வாசிப்பது, தமிழ் ஈழம் பற்றிய கருத்தரங்குகள் கேட்பது.

மா. ராஜன், பூம்புகார் நகர், கல்மடு P.NI. வவுனியா.

பொழுதுபோக்கு: சமூக சேவை, தமிழீழம் பற்றி விவாதித்தல், சுதந்திரன், சுடர், தீப்பொறி, இளைஞர்குரல் வாசித்தல்.

தென்கரம்பன் எஸ். குகநாதன், கரம்பன் தெற்கு, ஊர்காவற்றுறை.

பொழுதுபோக்கு: ஈழத்து இலக்கியம் பற்றி கருத்துப்பரிமாறல், நண்பர் தொடர்பு.

செல்வன் சு. ஞானசீலன், மே/பா இரஞ்சன் ஸ்ரோஸ், விஞயகபுரம் துணுக்காய்.

பொழுதுபோக்கு: கட்டுரை எழுதல்,நாவல் சஞ்சிகை வாசித்தல், வானொலிகேட்டல் ஆகியன.

வீரசொக்கன், 3ம் வட்டாரம், உடப்பு.

பொழுதுபோக்கு: கதைஞர்—கலைஞர் புத்திஜீவிகளைக் கண்டு செவ்வி காண்பது: கட்டுரை தீட்டுவது, முக்கிய பத்திரிகையில் செய்தி நிருபராகக் கடமையாற்றுகிறேன்.

யா. வரதராசன், மே/பா சம்பந்தர் சரணுலயம், 779. விஞயகபுரம், துணுக்காய்.

பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், முத்திரை சேகரித்தல், கதைகள், கட்டுரைகள் படித்தல் எழுதல்.

க. பத்மநாதன், ரூறிஸ்ட் ரெஸ்ட்றூம், மெயின் வீதி, கல்குடா.

பொழுதுபோக்கு: நாவல்கள், சஞ்சிகைகள் வாசித்தல், வானொலி கேட்டல்.

இ. ராஜபாலா, ராஜபவனம் பொன் வீதி, சங்கானை.

பொழுதுபோக்கு: படம் வரைதல், பத்திரிகை கதைப் புத்தகங்கள் வாசித்தல், தமிழீழ அரசியற் கருத்தரங்குகள் கேட்டல்.

பூ. தேவராசன், காட்டடைப்பு வீதி, காங்கேசன் துறை.

பொழுதுபோக்கு: சமூக வரலாற்று நாவல்கள் வாசித்தல், நாடகம் எழுதுதல் நடித்தல்.

கா. தர்மலிங்கம், 1ம் யூனிற் சேமமடுக்குளம்,

கதை, கட்டுரை, வானொலி கேட்டல், சிறுகதை எழுதுதல், நண்பர் தொடர்பு ஆகியவை.

த. காமினி, மே/பா வ. தன பாலசிங்கம், லேமன் ஒழுங்கை, மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்.

பொழுதுபோக்கு: நண்பர் பரிசுப்பொருட்கள் பரிமாறல், வானொலி கேட்டல்.

பொ. ரவீந்திரன்,இல. 547, யோகபுரம்.

பொழுதுபோக்கு: 'தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம்' சம்பந்தமான படங்கள்,செய்திகள் சேகரித்தல், பத்திரிகை, நாவல் வாசித்தல், துணுக்கு, சிறுகதை எழுதுதல் நண்பர் தொடர்பு.

ந. கேதீஸ்வரன், சிறி சண்முகானந்தா ஒழுங்கை, கல்வயல், சாவகச்சேரி.

பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், சமூகசேவை, பத்திரிகை வாசித்தல், தமிழ்ப் பணி.

செ. குபேரநாதன், தேவாலய ஒழுங்கை, தையிட்டி, காங்கேசன்துறை.

பொழுதுபோக்கு: கதைப் புத்தகங்கள்,பத்திரிகை, இலக்கிய சஞ்சிகைகள் வாசித்தல், பேனு நண்பர் தொடர்பு, ஆராய்ச்சி சம்பந்தமான செய்திகளை வாசித்தல்.

## "சுடர்" வட்டம்

'சுடர்' வாசகர்கள், ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொண்டு கலை, இலக்கிய பரிமாற்றங்களை நடத்தி பயன் பெறுவதற்குவசதியாக "சுடர் வட்டம்" எனும் பகுதியை ஆரம்பித்திருக்கிறோம்.

இலக்கிய நண்பர்களுடன் தொடர்புகொள்ள விரும்புவோர், தங்கள் முகவரி பொழுதுபோக்கு விபரங்களை எழுதி,கீழ்க்காணப்படும் முகவரியை வெட்டி அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்புக.

'சுடர்' வட்டம்
194 ஏ ,பண்டாரநாயக விதி,
கொழும்பு—12.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தைமகள்

சங்கம் முழங்கிடச் சலங்கை குலுங்கிட
எங்களின் வாழ்க்கையில் இன்பங்கள் பொங்கிட
மங்கலத் தை வருவாள் —அவள்புதுச்
சங்கதிகள் தருவாள்

இஞ்சியும் மஞ்சளும் இனிய நன் மலர்களும்
கொஞ்சிக் குலாவிடக் கோல மயில் என
வஞ்சிக் கொடி வருவாள்—தை மகள்
நெஞ்சில் இன்பம் தருவாள்.

இன்னல்கள் தேய்ந்துநல் இன்பங்கள் ஓங்கிட
கன்னலுடன் செந்நெற் கழனி செழித்திட
பொன் மகள் தை வருவாள்—அவளென்றும்
புதியக தை தருவாள்.

"உங்கள் நிலம் இது உங்கள் பயிர் இது
தங்க மலை நிகர்த் தானியம் பார்" எனத்
திங்களாள் தை வருவாள்—அவள் எங்கள்
சங்கடந் தீர்த்தருள்வாள்

மண்ணிலே விண்ணினைக் கண்டிடுவீர் எனப்
பண்ணமு தம்பல பாடிக்கொண்டே இங்கு
வண்ணமுடன் வருவாள்—தை மகள்
எண்ண மெலாம் இனிப்பாள்

சிற்பி

---

## புத்தாண்டு பிறக்கட்டுமே

புத்தாண்டு பிறக்கட்டுமே
புனிதமான எண்ணங்களே
சித்தத்தினில் நிறையட்டுமே
சஞ்சலங்கள் நீங்கட்டுமே
சத்தியத்தின் வழிநடக்க
சித்த மது விழையட்டுமே
இத்தரையில் பயின்றபாவம்
இல்லாது அழியட்டுமே!

தங்கிநின்ற மனக்குறைகள்
தீர்ந்துபோக மென்மேலும்
பொங்கட்டுமே இன்பமெங்கும்
புத்திமேலும் வளரட்டுமே
அங்கங்கள்நோய் அற்றநிலை
எந்நாளும் காணட்டுமே
தங்கம்போல குணம்படைத்து
மன்னவர்கள் திகழட்டுமே

செல்வி இ. லலிதாம்பிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்நூற்றுவர்.

மத்திய காலத்தில், தென்னிந்தியாவி லிருந்த வியாபாரக் குழுமங்களுள் மிகப் பிரபலமாக விளங்கியது ஐந்நூற்றுவர் என்ற குழுமமே. ஐயவோலு புரத்து(ஐகோல்) ஐந்நூறு சுவாமிகள் எனவும் இது அழைக்கப்பட்டது. அக்காலத்தில் பெரிய அரசர்களைப் போல் இக் குழுமத்தைச் சேர்ந்தவர்களும் தமக்குச் சொந்தமான ஒரு பிரசக்தியை வைத்திருந்தனர். அவர்களின் மரபுகளைப் பற்றியும் சாதனைகளைப் பற்றியும் இப்பிரசக்தி கூறியது. இவர்களே, விழுமிய வியாபாரிகளின் சட்டத் தொகுப்பான வீரவணஞ்—சுதர்மம் என்பதின் காவலாளர்களாக இருந்தனர். சமஸ்கிருதத்தில், வியாபாரியைக் குறிக்கும் 'வணிச' என்பதிலிருந்தே வணஞ்ச என்ற சொல் தோன்றியது என்பது வெளிப்படை. 500 வீர சாசனங்கள் (வீரர்களின் கட்டளைப் பட்டியல்) இத்தர்மத்தை உள்ளடக்கியிருந்தன. இவர்கள் தம் கொடியில் ஒரு நந்தியைப் பொறித்திருந்தனர். துணிச்சலுக்கும் தீரச் செயல்களுக்கும் உலகம் முழுதும் பெயர் பெற்று இருந்தார்கள். வாசுதேவன், கந்தழி, மூலபத்திரன் ஆகியோரின் பரம் பரையில் தாங்கள் தோன்றினரென உரிமை கொண்டாடுபவர்களாகவும் அவர்கள் இருந்தனர். சேர, சோழ, பாண்டிய, மலாய, மகத சௌராட்டிர, தானுத்திர, குரும்ப, காம்போச, கௌள, லாட, பரவ்வர, பரச(பாரசீகம்), நேபாள நாடுகளுக்கு அவர்கள் சென்றார்கள். ஆறு கண்டங்களிலுமுள்ள எல்லாத் தேசங்களுக்கும் தரைப்பாதைகளாலும் நீர்ப் பாதைகளாலும் அவர்கள் பிரயாணம் செய்தார்கள். யானைகள், இரத்தினக் கல், நீலக் கல், சந்திர வட்டக்கல், முத்து, பவளம், வைரம், வான நீலக் கல், கோமேதகம், புட்டராகம், மாணிக்கம், மரகதம் போன்ற இரத்தினக் கற்களிலும் ஏலக்காய், கராம்பு, பசை, சந்தனம், கற்பூரம், கஸ்தூரி, குங்குமப்பூ, மலிகசா முதலிய வாசனைப் பொருட்களிலும், இவர்கள் வியாபாரஞ் செய்ததுடன் தோளிற் சுமந்து திரிந்து வீதிகளிலும் விற்பனை செய்தார்கள். இவர்கள் ஒழுங்காக சுங்கப் பணம் கட்டினார்கள். திறை சேரியைத் தங்கத்தாலும் நகைகளாலும் நிறைத்தார்கள்; அரசனுடைய ஆயுத சாலையைத் திரும்பத் திரும்ப ஆயுதங்களால் நிறைத்தார்கள். நான்கு சமயங்களிலும் ஆறு தரிசனங்களிலும் பாண்டித்தியம் பெற்ற பண்டிதர்களுக்கும் ஞானிகளுக்கும் நன்கொடை கொடுத்தார்கள். கழுதைகளையும் எருமைகளையும் பொதி சுமத்துவதற்கு உபயோகிக்கும் எட்டு நாடுகளைச் சேர்ந்த செட்டிகளும், கவேரர்கள், காத்திரிகள், செட்டிகள், செட்டிக் குட்டர்கள், அங்காரர்கள், வீரர்கள் வீரவணிகர்கள், கண்டிகர்கள், கவுண்டர்கள், கவுண்ட சுவாமிகள் ஆகியோரும் இவர்களில் இருந்தார்கள். சுமத்திராவில் துண்டு துண்டாக இருக்கும் ஒரு கல் வெட்டும் (1088) பாகன் என்ற இடத்தில் இவர்கள் கட்டியெழுப்பிய விட்டுணு கோவிலும், கடல்களுக்கப்பால் இருந்த அன்னிய நாடுகளுடன் வியாபாரஞ் செய்த அவர்களின் உரிமைக்குச் சான்றுகளாக உள்ளன. இவ் விட்டுணு கோவில் பதின் மூன்றும் நூற்றுண்டில் மிகவும் உண்மையான நிலையில் இருந்தது. சோழ நாட்டில் வீர பட்டணங்கள் என்றழைக்கப் படும் குடியிருப்புகளில் இவர்கள் இருந்தனர். தல அதிகாரிகள், மத்திய அரசாங்கத்தினர் ஆகியோரின் அங்கீகாரத்துடன் வியாபார அலுவல்களில் இவர்கள் விஷேட சிறப்புரிமைகளை அனுபவித்தனர். இப்பழைய காலத்தில் வியாபாரம் மக்களின் மனப் போக்கை எவ்வாறு பாதித்தது. என்பதைப் பற்றி வரலாற்றாசிரியர்கள் எதுவுமே கூற வில்லை. உதாரணமாக வெவ்வேறு சமூகப் பின்னணியில் வாழும் மக்கள் ஒருவரையொருவர் அடிக் கடி சந்தித்து, ஒருவரை யொருவர் கலந்து வாழ்தல், குறுகிய மனப்பான்மைக்கு எதிரான தாராளமான மனப்பான்மையையும் உலகப் பொதுவான மனப்பான்மையையும் வளர்த்தன என்பதிற் சந்தேகமில்லை.

(தென் இந்திய வரலாறு)

## தமிழுக்கு உன்னைத் தந்திடு

சேனையொன்று வருகுது
　　செந்தமிழர் சேனை வருகுது
ஆனை குதிரைப் படையுடன்
　　ஆட்கள் நிறைய வருகிறார்.
தானைத் தலைவன் நடந்திட
　　தடம் தோள் வீரர் நடக்கிறார்
வானைக் கிழிக்கும் ஒலியுடன்
　　வயிர நெஞ்சார் வருகிறார்.

வீரமுரசு ஒலித்ததும்
　　வீரரெல்லாம் சேருவீர்
தீரமான போர்க்களம்
　　காண நாமும் போகுவோம்
வீரமறத் தமிழரின்
　　போர் வலியைக் காட்டியே
தூரமாகப் பகைவனை
　　துரத்த நாமும் மீள்குவோம்.

மானமுள்ள தமிழனே
　　மறத் தமிழா சேர்ந்திடு
ஊனமுற்று நாமெல்லாம்
　　உதைகள் பட்டு சாவதா
ஈனமான பிறவி யென
　　உலகம் நமை நகைப்பதால்
தானமாகக் கேட்கிறேன்
　　தமிழுக்கு உன்னைத் தந்திடு!

—வ. கோவை வரதராஜன்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் வாய்மொழி

## பலே ஜோர்!

மார்கழி சுடர் கண்டு திகைத்தேன். காரணம் அதிலுள்ள அத்தனை அம்சங்களும் மிகவும் சுவையாக அமைந்துள்ளன. எத்தனை மாற்றம்! எவ்வளவு சிறப்பம்சம்!! பலே ஜோர்!!'

சுடரில் சிறுவர்கள் சுவைப்பதற்கென அவ்வப்போது சில சிறுவர்களுக்கான அம்சங்களை சேர்த்து அவர்களின் சிந்தனையை வளர்க்க சுடர் வழிவகுத்தல் வேண்டும்.

விசான். சந்திரகுமார், யாழ்ப்பாணம்.

## பல் சுவையின் பெயர்தான் சுடரோ?

நக்கீரன் 'மேடை'யில் நின்று வாசகர்களை கலகலப்பாக்கி விடுகின்றார். இவர் எதிர்பார்க்கும் இனிய தமிழ்க் குரல்களை தேர்ந்தெடுத்து கூறலாமே! காவலூர் எஸ். ஜெகநாதன் எமது விடுதி வாழ்க்கையை நினைவில் நிறுத்தி என்றுமே மனிதன் மனத்தால் ஓய்வதில்லை. எனது கதாநாயகன் உடலாலும் ஓயவில்லை என்று கூறிவிடுகின்றார், பலே! இரண்டாவது தடவையாக 'கண்டோம் கருத்தறிந்தோம்' பகுதியில் ஆழிக்குமரன் ஆனந்தனை பேட்டி கண்டிருக்கின்றீர்கள். முதலாவது பேட்டியிலும் பார்க்க இந்தப் பேட்டி அவரின் வளர்ச்சியை எமக்கு காட்டுகின்றது தனிமகன் அவரின் சாதனைகள் எமக்கு போதனைகளை நல்கட்டும்.

முல்லைமணியின் தலைவியின் துயரமும், கலாமோகனின் புறநானூற்று இன்பமும் பழைய இலக்கியங்களை புதுச்சுவையுடன் ருசிக்க உதவுகின்றன. மணியின் மணிக்கதையான ஒற்றுமையும், செல்வன் ந. சக்திவேலின் மருதமரத்து கிளிகளும் தமிழரின் இறந்த, நிகழ்ந்த, எதிர்கால நிகழ்ச்சிகளை மறைமுகமாக கூறுகின்றன. செ. குணரத்தினம் தேர்தலில் குதித்து சொல்லடியும் தடியடியும் பெற்று எங்களுக்கு வாழ்வளிக்க மாட்டாரா என்று அங்கலாய்க்கின்றோம்.

'கொள்கைவேண்டும்' ஒவ்வொரு தமிழனும் கடைப்பிடிக்கவேண்டிய நற்செயல்களை நல்குகின்றது. இக்கவிதைக்கு இத்தலைப்பு பொருந்துமா?

'ஒரு கவிஞனின் காதல்' தித்திக்கின்றது. திருமலை இராசரத்தினம் காதலால் கவிதையை வென்று விட்டார்.

அவியன் 'பலியாடு' கதையினை நல்கி எம்மையும் களத்திற்கு கொண்டு சென்று பலியாடாக்கி விட்டாரே! போராட்ட வேளை பெண்களின் கற்பு பலியாக யார் காரணம் எது காரணம் என்று கேட்டு பலியாடாக்கி விட்டார்.

'பல்சுவையின் பெயர்தான் சுடரோ?' என்று மொத்தத்தில் கேட்கத்தோன்றுகின்றது. அத்தனை சுவைகள் இச்சுடரில், நகைச்சுவையைத்தவிர.

மல்லிகைவண்ணன், ஏழாலூர்.

## மாதம் இரு இதழாக்குங்கள்

பொங்கிவந்த கொடிய சூறாவளியின் அசுரத் தாக்குதலால், அல்லோலகல்லோல மடைந்து தனது எழிலெல்லாம் சிதைக்கப்பட்ட நிலையில் இன்று இருக்கும் எமது இனிய கிழக்கு மண்ணின் பரிதாப நிலையை, அங்குள்ள மக்களின் கண்ணீரை தங்களுக்குச் சாதகமாக, தங்கள் அரசியல் வாழ்வுக்கு ஒரு உரமாகப் பயன்படுத்துகின்ற அரசியல் நாகரிகம் தெரியாத சிலரை நினைத்து மனம் கொதிப்படையாதவர்கள் யாரும் இல்லை எனலாம். அந்த ஒருசிலருள் ஒருவரின் அறிக்கைக்கு செய்தி அலையிலே கடிதமூலம் பதில் கொடுத்து எங்கள் கொதிப்பை சுடர் ஓரளவு வெளிப்படுத்தியுள்ளது.

முல்லைமணி எழுதியிருந்த தலைவியின் துயரம் 'ரசிகமணியை' நினைவூட்டுகிறது. பழந்தமிழ் இலக்கியங்களிலும் சரி, சமீபகால இலக்கியங்களிலும் சரி, கிடக்கும் சுவைமிக்க கவிதைகளை எடுத்து அவர் ரசனையுடன் விளக்கிச் சொல்லும் பாங்கே தனி.

'ஸ்ரீகாந்தா' அவர்கள் கவிஞரிடம் கேட்கின்ற நியாயமான கேள்வி, 'நம் கவிஞர் ஏன் அப்படி ஒன்றைச் செய்யக் கூடாது' என்றே எண்ணவைக்கிறது. கவிஞர் மட்டும் நினைத்தால் அதை செய்துவிட முடியும்.

நல்ல ஒரு அர்த்தமுள்ள எண்ணத்தைக் கூறிய ஸ்ரீகாந்தாவுக்கு—அப்படி ஒரு கலம்பகம் படைக்கப்படுமானால், இலக்கிய உலகு என்றென்றும் கடப்பாடுடையதாக இருக்கும்.

துணுக்குகள், கவிதைகள், எல்லாமே சுவைத்தன. ஒட்டுமொத்தமாகச் சொன்னால் சுடர் எப்போதும் போலவே இம்முறையும் திருப்தியளித்தது. விரைவில் மாதமிருமுறை இதழாக்க முயற்சித்தால் என்ன? மறு இதழ் வரும்வரை நீண்டநாள் காக்கவேண்டி இருக்கிறது.

எஸ். கே. விக்னேஸ்வரன்,
அடம்பன், குடத்தனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்க்வைற் மாதக்கலண்டர் 1979

25 மில்க்வைற் நீலசோப் அல்லது 5 பார்சோப் அல்லது 10 நீம்சோப் அல்லது 10 சலவைப் பவுடர் மேலுறைகளை அனுப்பி மேற்படி அழகிய மாதக் கலண்டரைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

mws
மில்க்வைற்

மில்க்வைற்—யாழ்ப்பாணம்
தொலை பேசி 7233

கிளை:
79, மெசஞ்சர் வீதி,
கொழும்பு 12.
தொலை பேசி; 36063




# அண்ணா தயாரிப்புக்களே.

உங்கள் வாடிக்கை கடைகளிலும்
இலங்கையின் எல்லாக் கடைகளிலும் கிடைப்பது

அண்ணா கோப்பி
அண்ணா தேயிலை
அண்ணா பற்பொடி
அண்ணா பத்தி
ஜெயந்தி பத்திகளே.

இவற்றின் வெற்றுப் பக்கட்டுகளை அனுப்பி விரும்பிய பரிசை பெற்றுக்கொள்ளுங்கள்.

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்:—

# அண்ணா தொழிற்சாலை

இணுவில். டெலிபோன்: 7412


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இச்சஞ்சிகை 194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு-12ல் உள்ள சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org